# சோதிடமலர்

## SOTHIDA MALAR



| | | | |
|---|---|---|---|
| சுக் | புத | சூரி | குரு |
| செவ் லக் | பிரமோத வருஷ வைகாசி மீ | | கேது |
| ராகு சனி | | | |
| சந், நெ யுரே | | | |

இவ்விதழில்..........


- ❋ இம்மாதம் உங்களுக்கு எப்படி?
- ❋ திருமணமும் திருமாங்கல்யமும்
- ❋ விரதங்களும் வியாபகங்களும்
- ❋ வெளிநாட்டு வாய்ப்புண்டா?
- ❋ ஆய்வு மன்றம் ❋ சந்தேக நிவிர்த்தி
- ❋ சோதிட அறிவுப் போட்டி
- ❋ சோமரும் சோதிடரும்

இன்னும் பல



(15-5-90 முதல் 14-6-90 வரை)

விலை ரூபா: 5-00

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 13 ❋ இதழ் 2

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

பிரமோத ஸ்ரீ வைகாசி மீ

( 15 - 5 - 90 )


ஸவாய ஸஹஸ்ராய ஸவாத்ஜாய

ஸஹஸ்ராய ஸோநாஹஸ்த விக்ரஹாய

ஸம்க்ஷேத்ரகாரே ஸ்வேதகவ்காய

ஸகாரா ரூபாய நமோஸஹாய॥

❋ ❋ ❋

அருணமுகத் திருவழகா அருள் பொலியும் குழகா
தருணமழை போலுதவுந் தயை மிகுந்த குமரா
இருளரக்கர் குலமழிய எதிர்த்த சுடர் வேலா
குருபர ஓம் சிவக்கனலே குகனே சண்முகனே.

❋ ❋ ❋

## நீதிகளும் நியமங்களும்:

துஷ்ட வாகனத்தில் ஏறுதல், கரை உடைந்த ஆற்றில் இறங்குதல், தீப்பற்றிய வீட்டினுள் புகுதல், மரத்தின் நுனியில் ஏறுதல். மழையினுள் ஓடுதல், நீர்ப்பெருக்குமுன் எதிர்நிற்றல், தனியனாய் ஓடமேறிக் கரைகடத்தல், ஆட்டு மந்தை நடுவில் போதல், பாம்பு, மதயானை இவற்றின் முன் எதிர் நிற்றல் அல்லது பின் தொடர்தல் குடியில்லாத வீட்டில் தனியனாய் தூங்குதல், அடர்ந்த காட்டில் தனியனாய் போதல். இவைகள் இல்வாழ்க்கையில் இருப்பவனுக்கு ஆகாத செயல்களாகும்.

* குருவழிபாடு செய்யாத எந்த வித்தையும் சித்திபெறாது. கிரியை, ஞானம் இரண்டினுள்ளும் ஞானம் சிறந்தது போல; கிரியா குருவிலும் ஞானகுருவே சிறந்தவர். ஞானகுருவே சீடனுக்கு ஞானத்தை(அறிவை)க் கற்பித்து கிரியை விளக்கங்களையும் தெளிவுபடுத்துவதால் ஞானகுருவே வாழ்க்கையிலும், மோக்ஷ வழியிலும் அறிவைப் புகட்டுபவராகச் சிறந்து விளங்குகிறார்.

* வயதினாலும் கல்வியினாலும் ஒழுக்கத்தாலும் முதிர்ந்த பெரியோர்கள் வரும்போது சிறியவர்கள் இருக்கைவிட்டெழும்பி மரியாதை செய்ய வேண்டும். பெரியோரைத் தினமும் வந்தனம் செய்வதால் ஆயுள், கல்வி(கலை), கீர்த்தி, பலம் இந்நான்கும் மேலும் விருத்தியாகும்.

* பெரியோர் நித்திரை செய்யும்போது அவரை எழுப்புதலும், பசு தண்ணீர் குடிக்கும்போதும் புல் தின்னும்போதும், கன்றுக்குப் பால் கொடுக்கும் போதும் தடுத்தலும் கன்றின் கயிற்றைத் தாண்டுவதும் தவிர்க்கவேண்டுவனவாகும்.

இம்மாத விசேடம்

## விசாகப் பெருநாள்

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் ஜோதிப் பிழம்பாய் உலகமுய்யும் வண்ணம் தோன்றிய முருகப்பெருமான் ஆறுமுகமாகி கலியுக தெய்வமாகத் தோன்றி கலிகாலக் கஷ்டங்களை நீக்கும்படியாக இறைவனே குழந்தையாகத் தோன்றிய அந்தப் புண்ணிய தினமே வைகாசி விசாக நன்னாளாகும். அசுரர்களை அழித்து நல்லோரைக் காப்பாற்றும் வண்ணம் சூரசம்ஹாரம் செய்து தேவர்களைக் காப்பாற்றியதுபோல எமது அசுர குணங்களையழித்து நற்குணங்களை வளர்க்கும் திறனுடன் பக்தர்களாகிய எம்மைக் காத்தருளும் வண்ணம் இவ்விசாக நக்ஷத்திர தினத்திலே சரவணப் பெருமானை பிரார்த்திப்போமாக.

# பிரமோத வருஷ வைகாசி மாத கிரக நிரயன ஸ்புடங்கள்

**(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)**

**ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனும்சம் 23 பா 43கலை 32விகலை)**

| தேதி மே | தேதி வை | நாக்ஷத்ர நேரா பகல் 12-00 ம நி. செ | சூரியன் ☉ ரா பா க | சந்திரன் ☽ ரா பா க | செவ்வாய் ♂ ரா பா க | புதன் ☿ ரா பா க | குரு ♃ ரா பா க | சுக்கிரன் ♀ ரா பா க | சனி ♄ ரா பா க | ராகு ☊ ரா பா க | யுரேனஸ் ♅ ரா பா க | நெப்டி ♆ ரா பா க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | 3 30 23 | 1 0 11 | 8 7 16 | 10 24 14 | 0 14 22 | 2 15 43 | 11 18 31 | 9 1 31 | 9 17 38 | 8 15 28 | 8 20 38 |
| 16 | 2 | 3 34 19 | 1 9 | 9 9 38 | 24 58 | 14 14 | 15 55 | 19 40 | 1 30 | 17 35 | 15 26 | 20 37 |
| 17 | 3 | 3 38 15 | 2 7 | 9 22 15 | 25 43 | 14 12 | 16 6 | 20 48 | 1 29 | 17 32 | 15 25 | 20 36 |
| 18 | 4 | 3 42 11 | 3 4 | 10 5 13 | 26 27 | 14 14 | 16 18 | 21 57 | 1 28 | 17 29 | 15 23 | 20 36 |
| 19 | 5 | 3 46 7 | 4 2 | 10 18 35 | 27 12 | 14 22 | 16 29 | 23 5 | 1 26 | 17 25 | 15 21 | 20 35 |
| 20 | 6 | 3 50 3 | 4 0 | 11 2 25 | 27 56 | 14 31 | 16 41 | 24 14 | 1 25 | 17 21 | 15 20 | 20 34 |
| 21 | 7 | 3 53 59 | 5 58 | 11 16 43 | 28 41 | 14 47 | 16 52 | 25 23 | 1 24 | 17 18 | 15 18 | 20 33 |
| 22 | 8 | 3 57 55 | 6 55 | 0 1 27 | 10 29 25 | 15 7 | 17 4 | 26 32 | 1 22 | 17 15 | 15 17 | 20 32 |
| 23 | 9 | 4 1 51 | 7 53 | 0 16 31 | 11 0 10 | 15 31 | 17 6 | 27 41 | 1 20 | 17 12 | 15 15 | 20 30 |
| 24 | 10 | 4 5 47 | 8 51 | 1 1 47 | 0 54 | 15 59 | 17 28 | 28 50 | 1 19 | 17 9 | 15 13 | 20 29 |
| 25 | 11 | 4 9 43 | 9 49 | 1 17 4 | 1 38 | 16 32 | 17 40 | 11 29 59 | 1 17 | 17 6 | 15 11 | 20 28 |
| 26 | 12 | 4 13 39 | 10 46 | 2 2 10 | 2 22 | 17 9 | 17 52 | 0 1 9 | 1 15 | 17 3 | 15 9 | 20 27 |
| 27 | 13 | 4 17 35 | 11 44 | 2 16 57 | 3 7 | 17 49 | 18 4 | 2 18 | 1 13 | 16 0 | 15 8 | 20 26 |
| 28 | 14 | 4 21 31 | 12 41 | 3 1 18 | 3 51 | 18 34 | 18 16 | 3 27 | 1 11 | 16 56 | 15 6 | 20 25 |
| 29 | 15 | 4 25 27 | 13 39 | 3 15 10 | 4 35 | 19 22 | 18 28 | 4 37 | 1 8 | 16 53 | 15 4 | 20 24 |
| 30 | 16 | 4 29 23 | 14 37 | 3 28 34 | 5 19 | 20 13 | 18 41 | 5 47 | 1 6 | 16 50 | 15 2 | 20 22 |
| 31 | 17 | 4 33 19 | 15 34 | 4 11 33 | 6 3 | 21 8 | 18 53 | 6 56 | 1 4 | 16 47 | 15 0 | 20 21 |
| ஜூன் 1990 | | | | | | | | | | | | |
| 1 | 18 | 4 37 15 | 16 32 | 4 24 10 | 6 47 | 22 7 | 19 57 | 8 6 | 1 1 | 16 44 | 14 58 | 20 20 |
| 2 | 19 | 4 41 11 | 17 29 | 5 6 30 | 7 31 | 23 9 | 19 18 | 9 16 | 0 59 | 16 40 | 14 56 | 20 19 |
| 3 | 20 | 4 45 7 | 18 27 | 5 18 38 | 8 15 | 24 14 | 19 30 | 10 25 | 0 56 | 16 37 | 14 54 | 20 17 |
| 4 | 21 | 4 49 3 | 19 24 | 6 0 37 | 8 59 | 25 22 | 19 43 | 11 35 | 0 54 | 16 34 | 14 52 | 20 16 |
| 5 | 22 | 4 52 59 | 20 22 | 6 12 31 | 9 42 | 26 33 | 19 55 | 12 45 | 0 51 | 16 31 | 14 49 | 20 15 |
| 6 | 23 | 4 56 55 | 21 19 | 6 24 23 | 10 26 | 27 47 | 20 8 | 13 55 | 0 48 | 16 28 | 14 47 | 20 13 |
| 7 | 24 | 5 0 51 | 22 16 | 7 6 16 | 11 10 | 29 4 | 20 21 | 15 5 | 0 45 | 16 25 | 14 45 | 20 12 |
| 8 | 25 | 5 4 47 | 23 14 | 7 18 10 | 11 53 | 1 0 25 | 20 33 | 16 15 | 0 42 | 16 22 | 14 43 | 20 11 |
| 9 | 26 | 5 8 43 | 24 11 | 8 0 9 | 12 37 | 1 48 | 20 46 | 17 25 | 0 39 | 16 19 | 14 41 | 20 9 |
| 10 | 27 | 5 12 39 | 25 8 | 8 12 12 | 13 21 | 3 14 | 20 59 | 18 36 | 0 36 | 16 15 | 14 38 | 20 8 |
| 11 | 28 | 5 16 35 | 26 6 | 8 24 23 | 14 4 | 4 43 | 21 12 | 19 46 | 0 33 | 16 12 | 14 36 | 20 6 |
| 12 | 29 | 5 20 31 | 27 3 | 9 6 42 | 14 47 | 6 15 | 21 25 | 20 56 | 0 29 | 16 9 | 14 34 | 20 5 |
| 13 | 30 | 5 24 27 | 28 0 | 9 19 12 | 15 31 | 7 49 | 21 37 | 22 7 | 0 26 | 16 6 | 14 32 | 20 3 |
| 14 | 31 | 5 28 23 | 1 28 58 | 10 1 57 | 11 16 14 | 1 9 27 | 2 21 50 | 0 23 17 | 9 0 23 | 9 16 3 | 8 14 29 | 8 20 2 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (வைகாசி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதிவரை)

(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53<br>6...53 | 6...53<br>7...53 | 7...53<br>8...53 | 8...53<br>9...53 | 9...53<br>10...53 | 10...53<br>11...53 | 11...53<br>12...53 | 12...53<br>1...53 | 1 . 53<br>2...53 | 2...53<br>3...53 | 3...53<br>4...53 | 4.. 53<br>5.. 53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

****************************************

# நாள் நலமா?

****************************************

வை 1 செவ் (15-5-90) பஞ்சமி பகல் 11-49 வரை, உத்தராடம் முழுவதும், மரணம் அசுபதினம். ராகு 2-53 — 4-27

வை 2 புத (16-5-90) ஷஷ்டி பகல் 12-48 வரை, உத்தராடம் காலை 6-12 வரை, அமிர்தசித்தம், நற்கருமங்களுக்கு உகந்த தினம். ராகு 11-53 — 1-27

வை 3 வியா (17-5-90) ஸப்தமி பகல் 1-17 வரை, திருவோணம் காலை 7-30 வரை, சித்தம், பகல் 1-17 க்குள் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 1-23 — 2-57

வை 4 வெ (18-5-90) அஷ்டமி பகல் 1-02 வரை, அவிட்டம் - மரணம் காலை 8-07 வரை, அசுப தினம். ராகு 10-23 — 11-57

வை 5 சனி (19-5-90) நவமி பகல் 12-01 வரை, சதயம் காலை 7-58 வரை, மரணம், சுபதினமன்று ராகு 8-52 — 10-26

வை 6 ஞா (20-5-90) தசமி பகல் 10-12 வ, பூரட்டாதி காலை 7-02 வரை, உத்தரட்டாதி பி. இ. 5-24 வரை, சித்தாமிர்தம், காலை 7-02 இன் மேல் நற்கருமங்கள் செய்யலாம். ரா. 4-22 — 5-56

வை 7 திங் (21-5-90) ஏகாதசி காலை 7-42 வரை, துவாதசி பி. இ. 4-36 வரை, ரேவதி பி. இ. 3-09 வரை, சித்தம், ஸர்வ ஏகாதசி விரதம், கரிநாள். நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 7-22 — 8-56

வை 8 செவ் (22-5-90) திரயோதசி பி. இ. 1-02 வ. அசுவினி பி. இ. 12-26 வரை, அமிர்தசித்தம், பிரதோஷ விரதம், வயற் கருமங்கட்கு நன்று. ராகு 2-52 — 4-26

வை 9 புத (23-5-90) சதுர்த்தசி இரவு 9-11 வரை, பரணி இரவு 9-26 வரை, சித்தாமிர்தம், அசுப தினம். ராகு 11-52 — 1-24

வை 10 வியா (24-5-90) அமாவாசை மாலை 5-18 வரை, கார்த்திகை மாலை 6-21 வரை, மரணம், அமாவாசை விரதம், கார்த்திகை விரதம், அசுப தினம். ராகு 1-22 — 2-56

வை 11 வெள் (25-5-90) பிரதமை பகல் 1-29 வ. ரோகிணி-மரணம் பகல் 3-22 வரை, சந்திர தரிசனம், அசுபதினம். ராகு 10-22 — 11-56

வை 12 சனி (26-5-90) துவிதியை காலை 9-50 வரை மிருகசீரிடம் பகல் 12-42 வரை. சித்தம். நற்கருமங்கள் செய்யலாம். ராகு 8-52 — 10-26

வை 13 ஞா (27-5-90) திரிதியை காலை 6-52 வரை, சதுர்த்தி பி.இ. 4-23 வரை, திருவாதிரை பகல் 10-30 வரை, சதுர்த்தி விரதம், சித்தம், சுபகருமங்களை விலக்குக. ராகு 4-22 — 5-56

வை 14 திங் (28-5-90) பஞ்சமி - அமிர்தம் பி.இ. 2-38 வரை, புனர்பூசம் காலை 8-57 வரை, சுப கருமங்களுக்கு உகந்தது. ராகு 7-22 — 8-56

வை 15 செவ் (29-5-90) ஷஷ்டி-சித்தம் பி.இ 1-39 வரை, பூசம் காலை 8-07 வரை, ஷஷ்டி விரதம் வயற்கருமங்கட்கு உகந்தது. ராகு 2-52 — 4-26

வை 16 புத (30-5-90) ஸப்தமி-சித்தம் பி.இ. 1-29 வரை, ஆயிலியம் காலை 8-05 வரை, கரிநாள், அசுபதினம். ராகு 11-52 — 1-26

வை 17 வியா (31-5-90) அஷ்டமி பி.இ. 2-04 வ. மகம் காலை 8-50 வரை, அமிர்தசித்தம், கரிநாள் சுபதினமன்று. ராகு 1-22 — 2-56

வை 18 வெ (1-6-90) நவமி பி.இ. 3-20 வ. பூரம் பகல் 10-18 வரை, சித்தம், சுபதினமல்ல. ராகு 10-22 — 11-56

வை 19 சனி (2-6-90) தசமி பி.இ. 5-05 வரை, உத்தரம் பகல் 12-21 வரை, மரணம், சுபதினமன்று. ராகு 8-52 — 10-26

வை 20 ஞா (3-6-90) ஏகாதசி முழுவதும், அத்தம் பகல் 2-52 வரை, அமிர்தசித்தம், ஸ்மார்த்த ஏகாதசி விரதம், நற்கருமங்கட்கு நன்று. ராகு 4-22 — 5-56

வை 21 திங் (4-6-90) ஏகாதசி காலை 7-12 வரை, சித்திரை-மரணம் மாலை 5-40 வரை, வைஷ்ணவ ஏகாதசி விரதம், அசுபதினம். ராகு 7-22 — 8-56

வை 22 செவ் (5-6-90) துவாதசி காலை 9-32 வரை, சுவாதி-சித்தம் இரவு 8-36 வரை, பிரதோஷ விரதம், நற்கருமங்கட்கு உகந்தது. ராகு 2-52 — 4-26

வை 23 புத (6-6-90) திரயோதசி பகல் 11-56 வ. விசாகம் இ. 11-34 வரை, சித்தாமிர்தம், வைகாசி விசாகம், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 11-52 — 1-06

வை 24 வியா (7-6-90) சதுர்த்தசி பகல் 2-17 வரை, அனுஷம்-சித்தம் பி.இ. 2-27 வரை, நற்கருமங்கட்கு உகந்தது. ராகு 1-22 — 2-56

வை 25 வெள் (8-6-90) பூரணை மாலை 4-32 வரை. கேட்டை-மரணம் பி.இ. 5-12 வரை, பூரணை விரதம் அசுபதினம். ராகு 10-22—11-56

வை 26 சனி (9-6-90) பிரதமை மாலை 6-35 வரை, மூலம் முழுவதும், சித்தம், சுப கருமங்கட்கு நன்று. ராகு 8-52—10-26

வை 27 ஞா (10 6-90) துவிதியை இரவு 8-22வரை மூலம் காலை 7-43வரை, அமிர்தசித்தம், அசுப தினம். ராகு 4-22—5-56

வை 28 திங் (11-6 90) திரிதியை இரவு 9-50வரை, பூராடம் காலை 9-58 வரை, மரணம், சுபதினமன்று. ராகு 7-22—8-56

வை 29 செவ் (12-6 90) சதுர்த்தி இரவு 10-54 வ. உத்தராடம்-மரணம் பகல் 11-51 வரை, சுபதினமன்று. ராகு 2-52—4-26

வை 30 புத (13-6 90) பஞ்சமி இரவு 11-28 வரை திருவோணம்-சித்தம் பகல் 1-18வரை, நற்கருமங்கட்கு உகந்தது. ராகு 11-52—1-26

வை 31 வியா (14-6-90) ஷஷ்டி இரவு 11-28வரை, அவிட்டம்-சித்தம் பகல் 2-14 வரை, சுபகருமங்கட்கு நன்று ராகு 1-23—2-57

# வேம்பின் மகிமை

வேம்பிற்கு மலட்டுப்பூச்சிகளைக் கொல்லக் கூடிய சக்தியிருக்கிறது. அதனாலேதான் பிள்ளைப் பேறில்லாத பெண்கள் முற்காலத்தில் குளித்து முழுகிவிட்டு வேப்ப மரத்தைச் சுற்றி பிரதட்சிணம் வரும் வழக்கமொன்றிருந்தது. சோதிடத்தில் வேம்பைப் பெண்ணாகப் ப்ரவிக்கப்பட்டிருக்கிறது. வேப்பங்குச்சியால் பல்துலக்கிட பற்கள் மிக வெண்மை அடைகின்றன. அதிலுள்ள கசப்புத் தன்மை பல்லிலுள்ள கெட்ட பூச்சிகளைக்கொன்று பற்களை உறுதிப்படுத்துவதுடன் வேறு வியாதிகள் வராமலுந் தடுக்கின்றது. வேம்பிலுள்ள கிருமி அழிக்குந்தன்மை, வியாதிகளைத் தடுக்குந்தன்மை காரணமாக சவர்க்காரம் செய்யவும் பயன்படுத்துகிறார்கள். இதனாலான சவர்க்காரத்தை உபயோகிப்பதால் தோல் வியாதிகள் வெகுவாகக் குறைகின்றன.

இவ்வளவு பெருமைகளுடனும் எமது முற்றத்தில் நிற்கும் வேம்பைத் தளபாடம் ஆக்கிவிட்டு, நாம் செயற்கை மருந்துகளைத்தேடி அலைவதுதான் வேடிக்கை.

# இடப லக்கின ஆணும் கன்னி லக்கினப் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

— வே. சின்னத்துரை - நல்லூர். —

இடப லக்கின ஆண் நல்ல நட்புடையவர். அமைதியானவர்; எதிலும் உண்மையுள்ளவர். அவளுக்குத் தக்கதாக நடந்துகொள்வார். இருவருடைய மனப்பாங்கும் பொருளாதாரத்தில் ஒருமைப்பாடுடையதாகும். எதிர்கால விடயங்களை திட்டமிடுவதில் இருவரும் உவகை கொள்வார்கள். ஆனால் கடன் என்ற ஒரு பீதியுமுண்டு. இதனால் இருவருக்கும் நல்ல உறவுண்டு. இடபக்காரர் தனது வீட்டையும் அதன் சௌகரியங்களையும் கவனிப்பார். கன்னிப்பெண் இவற்றைப் பற்றி அக்கறையில்லாவிட்டாலும் வீட்டு நிர்வாகம் நன்றாய் நடத்துவித்து அவருடைய சௌகரியங்கள் நிறைவேற்றப்படும். உணர்ச்சி வசத்தில் இருவரிலும் பார்க்க இடபகாரர் மிகவும் கூடுதலானவர். ஆனால் இதை அவர் அவளிலும் ஊட்டுவார்; காலத்துக்குக் காலம் இவர் பொறுமைப்படுவார். ஆனால் அதற்கு இடம் கொடாமல் அவள் நடந்துகொள்ளுவாள். இதனால் அவளுக்குப் பாதுகாப்புண்டு. இருவருக்கும் இடையில் பிணக்கு வருவதற்கு அவனின் சோம்பேறித்தனமே காரணமாயிருக்கும். இது அந்தப் பெண்ணுக்கு எதிர்ப்பாயிருக்கும். இப்படிக் குணம் அதி சீக்கிரம் நீங்கிவிடும். ஆதலால் அவள் இதைக் கணக்கெடுக்காமலிருக்க வேண்டும்.

இன்னுமொரு அபாயம் இந்த இருவருக்கும் உண்டு. அவர்களுடைய ஒதுங்கியிருக்கும் மனப்பான்மையும் வீட்டு நிர்வாகமும் பிற உலக விவகாரங்களை வெட்டிவிடும். இருவரும் நட்பாயிருப்பினும் மேற்படி மனப்பான்மை சலிப்படையச் செய்யும். இப்படி உறவு பாதிக்கப்படுமானால் அவர்கள் சமூகத் தொண்டு விடயங்களில் பங்கு பற்ற வேண்டும்.

அவர்கள் சுறுசுறுப்பான பாலியலில் ஈடுபடுவார்கள். ஆனால் ஒதுங்கும் தன்மையுடையதாகும். எனினும் அவன் சொல்வனவற்றிற்கு இணைந்தே போவாள். இருவரும் ஒருவருக்கொருவர் வாழ்வதற்கென்றே இருக்கிறார்கள்.

இது ஓர் நல்ல உறவு.


## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### பிரமோத ஸ்ரீ வைகாசி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (15-5-90 முதல் 14-6-90 வரை)

| இங் மே | தமி வை. | வாரம் | இடபம் ம.மி. முதல் (காலை) | இடபம் ம.மி. வரை | மிதுனம் ம. மி. வரை (காலை) | கடகம் ம. மி. வரை (பகல்) | சிங்கம் ம. மி. வரை (பகல்) | கன்னி ம. மி. வரை (பி.ப) | துலா மி. ம. வரை (மாலை) | விருச்சி ம. மி. வரை (இரவு) | தனுசு ம. மி. வரை (இரவு) | மகரம் ம. மி. வரை (இரவு) | கும்பம் ம. மி. வரை (பி.இ) | மீனம் ம. மி. வரை (பி.இ) | மேடம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | செவ் | 5 53 | 8 2 | 10 14 | 12 21 | 2 22 | 4 21 | 6 25 | 8 35 | 10 43 | 12 39 | 2 24 | 4 6 | 5 56 |
| 16 | 2 | புதன் | 5 56 | 7 59 | 10 11 | 12 18 | 2 19 | 4 18 | 6 22 | 8 32 | 10 40 | 12 36 | 2 21 | 4 3 | 5 53 |
| 17 | 3 | வியா | 5 54 | 7 55 | 10 7 | 12 14 | 2 15 | 4 14 | 6 18 | 8 28 | 10 36 | 12 32 | 2 17 | 3 59 | 5 49 |
| 18 | 4 | வெள் | 5 50 | 7 55 | 10 3 | 12 10 | 2 11 | 4 10 | 6 14 | 8 24 | 10 32 | 12 28 | 2 13 | 3 55 | 5 45 |
| 19 | 5 | சனி | 5 46 | 7 47 | 9 59 | 12 6 | 2 7 | 4 6 | 6 10 | 8 20 | 10 28 | 12 24 | 2 9 | 3 51 | 5 41 |
| 20 | 6 | ஞாயி | 5 42 | 7 43 | 9 55 | 12 2 | 2 3 | 4 2 | 6 6 | 8 16 | 10 24 | 12 20 | 2 5 | 3 47 | 5 37 |
| 21 | 7 | திங் | 5 38 | 7 39 | 9 51 | 11 58 | 1 59 | 3 58 | 6 2 | 8 12 | 10 20 | 12 16 | 2 1 | 3 43 | 5 33 |
| 22 | 8 | செவ் | 5 34 | 7 35 | 9 47 | 11 54 | 1 55 | 3 54 | 5 58 | 8 8 | 10 16 | 12 12 | 1 57 | 3 39 | 5 29 |
| 23 | 9 | புதன் | 5 30 | 7 31 | 9 43 | 11 50 | 1 51 | 3 50 | 5 54 | 3 4 | 10 12 | 12 8 | 1 53 | 3 35 | 5 25 |
| 24 | 10 | வியா | 5 26 | 7 27 | 9 39 | 11 46 | 1 47 | 3 46 | 5 50 | 8 0 | 10 8 | 12 4 | 1 49 | 3 31 | 5 21 |
| 25 | 11 | வெள் | 5 22 | 7 23 | 9 35 | 11 42 | 1 43 | 3 42 | 5 46 | 7 56 | 10 4 | 12 00 | 1 45 | 3 27 | 5 17 |
| 26 | 12 | சனி | 5 18 | 7 19 | 9 31 | 11 38 | 1 39 | 3 38 | 5 42 | 7 52 | 10 0 | 11 56 | 1 41 | 3 23 | 5 13 |
| 27 | 13 | ஞாயி | 5 14 | 7 15 | 9 27 | 11 34 | 1 35 | 3 34 | 5 38 | 7 48 | 9 56 | 11 52 | 1 37 | 3 19 | 5 9 |
| 28 | 14 | திங் | 5 10 | 7 11 | 9 23 | 11 30 | 1 31 | 3 30 | 5 34 | 7 44 | 9 52 | 11 48 | 1 33 | 3 15 | 5 5 |
| 29 | 15 | செவ் | 5 6 | 7 7 | 9 19 | 11 26 | 1 27 | 3 26 | 5 30 | 7 40 | 9 48 | 11 44 | 1 29 | 3 11 | 5 1 |
| 30 | 16 | புதன் | 5 2 | 7 3 | 9 15 | 11 22 | 1 23 | 3 22 | 5 26 | 7 36 | 9 44 | 11 40 | 1 25 | 3 7 | 4 57 |
| 31 | 17 | வியா | 4 58 | 6 59 | 9 11 | 11 18 | 1 19 | 3 18 | 5 22 | 7 32 | 9 40 | 11 36 | 1 21 | 3 3 | 4 53 |
| ஜுன் 1990 | | | | | | | | | | | | | | | |
| 1 | 18 | வெள் | 4 54 | 6 55 | 9 7 | 11 14 | 1 15 | 3 14 | 5 18 | 7 28 | 9 36 | 11 32 | 1 17 | 2 59 | 4 49 |
| 2 | 19 | சனி | 4 50 | 6 51 | 9 3 | 11 10 | 1 11 | 3 10 | 5 14 | 7 24 | 9 32 | 11 28 | 1 13 | 2 55 | 4 45 |
| 3 | 20 | ஞாயி | 4 46 | 6 47 | 8 59 | 11 6 | 1 7 | 3 6 | 5 10 | 7 20 | 9 28 | 11 24 | 1 9 | 2 51 | 4 41 |
| 4 | 21 | திங் | 4 42 | 6 43 | 8 55 | 11 2 | 1 3 | 3 2 | 5 6 | 7 16 | 9 24 | 11 20 | 1 5 | 2 47 | 4 37 |
| 5 | 22 | செவ் | 4 38 | 6 39 | 8 51 | 10 58 | 12 59 | 2 58 | 5 2 | 7 12 | 9 20 | 11 16 | 1 1 | 2 43 | 4 33 |
| 6 | 23 | புதன் | 4 34 | 6 35 | 8 47 | 10 54 | 12 55 | 2 54 | 4 58 | 7 8 | 9 16 | 11 12 | 12 57 | 2 39 | 4 29 |
| 7 | 24 | வியா | 4 30 | 6 31 | 8 43 | 10 50 | 12 51 | 2 50 | 4 54 | 7 4 | 9 12 | 11 8 | 12 53 | 2 35 | 4 25 |
| 8 | 25 | வெள் | 4 26 | 6 27 | 8 39 | 10 46 | 12 47 | 2 46 | 4 50 | 7 0 | 9 8 | 11 4 | 12 49 | 2 31 | 4 21 |
| 9 | 26 | சனி | 4 22 | 6 23 | 8 35 | 10 42 | 12 43 | 2 42 | 4 46 | 6 56 | 9 4 | 10 0 | 12 45 | 2 27 | 4 17 |
| 10 | 27 | ஞாயி | 4 18 | 6 19 | 8 31 | 10 38 | 12 39 | 2 38 | 4 42 | 6 52 | 9 0 | 10 56 | 12 41 | 2 23 | 4 13 |
| 11 | 28 | திங் | 4 14 | 6 15 | 8 27 | 10 34 | 12 35 | 2 34 | 4 38 | 6 48 | 8 56 | 10 52 | 12 37 | 2 19 | 4 9 |
| 12 | 29 | செவ் | 4 10 | 6 11 | 8 23 | 10 30 | 12 31 | 2 30 | 4 34 | 6 44 | 8 52 | 10 48 | 12 33 | 2 15 | 4 5 |
| 13 | 30 | புதன் | 4 6 | 6 7 | 8 19 | 10 26 | 12 27 | 2 26 | 4 30 | 6 40 | 8 48 | 10 44 | 12 29 | 2 11 | 4 1 |
| 14 | 31 | வியா | 4 2 | 6 3 | 8 15 | 10 22 | 12 23 | 2 22 | 4 26 | 6 36 | 8 44 | 10 40 | 12 25 | 2 7 | 3 57 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: வை. 31உ (14-6-90) பகல் 9-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க (8-15—10-22) கடகலக்னம்.

# வைகாசி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

8உ (22-5-90) இரவு 11-57க்கு மீன-செவ்
10உ (24-5-90) பி.இ. 5-04க்கு மே-சுக்
24உ (7-6-90) இரவு 10-00க்கு இட-புத
4உ புதன் வக்ரத்தியாகம்
சனி, யுரேனஸ், நெப்டியூன் வக்ரத்திலேயே சஞ்சரிக்கின்றனர்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வை. | 1உ | (15-5-90) | பகல் | 10-43 | முதல் | மகரம் |
| | 3உ | (17-5-90) | மாலை | 7-54 | ,, | கும்பம் |
| | 5உ | (19-5-90) | இரவு | 1-20 | ,, | மீனம் |
| | 7உ | (21-5-90) | பி.இ. | 3-09 | ,, | மேடம் |
| | 9உ | (23-5-90) | பி.இ. | 2-40 | ,, | இடபம் |
| | 11உ | (25-5-90) | பி.இ. | 1-53 | ,, | மிதுனம் |
| | 13உ | (27-5-90) | பி.இ. | 3-16 | ,, | கடகம் |
| | 16உ | (30-5-90) | காலை | 8-05 | ,, | சிங்கம் |
| | 18உ | (1-6-90) | மாலை | 4-45 | ,, | கன்னி |
| | 20உ | (3-6-90) | பி.இ. | 4-14 | ,, | துலாம் |
| | 23உ | (6-6-90) | மாலை | 4-49 | ,, | விருச்சிகம் |
| | 25உ | (8-6-90) | பி.இ. | 5-12 | ,, | தனுசு |
| | 28உ | (11-6-90) | மாலை | 4-28 | ,, | மகரம் |
| | 30உ | (13 6 90) | பி.இ. | 1-41 | ,, | கும்பம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி வைகாசி 31 உ பகல் 9.00 மணிக்கு கடக லக்னம் என அறிந்து கொண்ட பின் 'கடகம்' என்ற கட்டில் 'ல'என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

இம்மாதபலன்

மாதம் பிறக்கும்போது கும்பம் உதயலக்கினமாக அமைகிறது. இலக்கினத்தில் செவ்வாய் இருப்பினும் வியாழனின் பார்வை இருப்பதாலும், இலக்கினாதிபதி ஆட்சிபெறுவதாலும் தலைவர்களிடையே சில மனவேறுபாடுகள் இருப்பினும், கஷ்டபலன்கள் ஏற்படாது. 2ல் சுக்கிரன் உச்சம் பெறுவதால் பொருளாதாரம் சிறப்படையும். கல்வித்துறையிலும் ஊக்கம்காணும். பிறநாட்டு உதவிகள் கிட்டும்.

# வைகாசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

**15-05-90 – 14-06-90**

சூரியன்: 15-5-90 அதிகாலே 12-47
இடபராசிப்பிரவேசம்.
15-5-90 உதயம் காலே 5-53
15-5-90 உச்சம் பகல் 12-06
15-5-90 அஸ்தமனம் மாலே 6-19
30-5-90 உதயம் காலே 5-52
30-5-90 உச்சம் பகல் 12-07
30-5-90 அஸ்தமனம் மாலே 6-23

சந்திரன்: 24-5-90 அமாவாசை மாலே 5-18
25-5-90 சந்திரதரிசனம்
8-5-90 பூரணை மாலே 4-32

## கிரகங்கள்

புதன்: மாதாரம்பத்தில் சூரியோதயம் முன் கிழக்குவானில் 15 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் 18-5-90ல் வக்ரத்தில் நின்றும் நீங்கி நேர்கதியில் செல்லத் தொடங்கும். 31-5-90-ல் சூரியனிலிருந்து கூடியதூரம்(25°) பிரிந்து காணப்படும். மாதமுடிவில் 20 பாகை உயரத்தில் காணப்படும். 7-6-90ல் இடபராசியில் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாதத்தொடக்கத்தில் சூரியோதயம் முன் கிழக்குவானில் 41 பாகை உயரத்தில் பிரகாசமாகக் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 36 பாகை உயரத்தில் தோன்றும். 22-5-90 இல் மேட ராசியில் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாதாரம்பத்தில் சூரிய உதயம் முன் கிழக்கு வானில் 66 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 73 பாகை உயரத்தில் தோற்றும். 22-5-90-ல் மீனராசியில் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாதாரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் 46 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 23 பாகை உயரத்தில் தோற்றும். மாதம் முழுவதும் மிதுன ராசியிலேயே சஞ்சரிக்கிறது.

சனி: மாதாரம்பத்தில் வக்கிரகதியில் செல்லும் இக்கிரகம் சூரிய உதயம் முன் உச்சிக்கு மேற்கே 27 பாகை தூரத்தில் சரிந்து காணப்படும் இக்கிரகம் மாத இறுதியில் மேற்கே 59 பாகை சரிந்து (அதாவது அடிவானத்திலிருந்து 31 பாகை உயரத்தில்) காணப்படும்.

யுரேனஸ்: தனு ராசியில் வக்கிர கதியில் சஞ்சரிக்கிறது.

நெப்டியூன்: தனு ராசியில் வக்கிரத்தில் சஞ்சரிக்கிறது.

புளுட்டோ: துலா ராசியில் சஞ்சரிக்கிறது.

## சமாகமங்கள்

15-5-90 நண்பகல் சந்திரனுக்கு வடக்கு சனி 1½ பாகை. அன்று உதயம் முன் (5 மணியளவில்) அவதானிக்கவும்.

20-5-90 அதிகாலே 2 மணியளவில் சந்திரனுக்கு தெற்கு செவ்வாய் 5¾ பாகை.

22-5-90 அதிகாலே 2 மணியளவில் சந்திரனுக்கு தெற்கு சுக்கிரன் 7½ பாகை.

23-5-90 காலே 8 மணியளவில் சந்திரனுக்கு தெற்கு புதன் 9 பாகை. அன்று உதயம் முன் (5 மணியளவில்) அவதானிக்கவும்.

27-5-90 காலே 7 மணியளவில் சந்திரனுக்கு தெற்கு வியாழன் 2½ பாகை. அன்று சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் அவதானிக்க.


11-6-90 மாலே 5 மணியளவில் சந்திரனுக்கு வடக்கு சனி 1½ பாகை. அன்று உதயம் முன் (5 மணியளவில்) அவதானிக்கவும்.

## இலங்கை சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் சித்திரை மாதக் கூட்டம் 29-4-90 பகல் 10 மணியளவில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஆரம்பமானது. செயலாளரும், உபசெயலாளரும் சமுகம் தராமையினால் பொருளாளரால் சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு, சபையாரால் சரியென ஏற்கப்பட்டு தலைவரால் கைச்சாத்திடப்பட்டது.

பின்னர் திரு. ஆர். முத்துலிங்கம் அவர்கள் கிரகங்கள் நட்சத்திரங்களில் நிற்கும் பொழுது அவைகள் கொடுக்கும் பலாபலன்கள் பற்றி விரிவுரை ஆற்றினார்.

பின்பு கலந்துரையாடலில் பலரும் பங்குபற்றினார்கள். பின்னர் 11-30 மணியளவில கூட்டம் இனிது நிறைவேறியது.




இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

**15-05-90 முதல் 14-06-90 வரை**

**பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமேகிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதைமனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.**



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 2ல் ரஜஸமூர்த்தியாகி பலத்துடன் வலம் வருகிறார். வியாழ பகவான் 3ல் குரூர கோசார சஞ்சாரம் செய்கிறார். மற்றும் கிரகங்களின் கோசார சஞ்சாரங்களையும் கவனித்தால் சராசரியாக-நன்மை தீமை கலந்த பலன்கள் தான் நிகழும். இவர்களின் தேகநலப்-குடும்பசுகம் என்பன இடைக்கிடை பாதிப்படையும். பொருள் வருமானம் கணிசமான அளவு கூடினாலும் தவிர்க்க முடியாத வீண் செலவுகளும் உண்டாகும். புத்திரர்-உறவினர் துன்பம் கூடும். காரியத்தடை-அலைச்சல்-ஏமாற்றம்-அந்நியதேச சஞ்சாரம்-அந்நியர் உதவி-விற்றல் வாங்கல் முதலானவற்றில் லாபம் முதலான சுபாசுப பலன்கள் நிகழும்.

குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் இடைக்கிடை தோன்றிமறையும். குடும்பவருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். உதவி ஒத்தாசைகள் கிடையாது. எனினும் வீட்டில் சுபமங்கலகாரியங்கள் நிகழலாம்.

வர்த்தகர்களுக்கு இம்மாதமும் வியாபாரமந்த நிலை தொடரும். பழைய நிலுவைக் கடன்களால் வீண்செலவுகளும் பகை விரோதங்களும் கூடஏற்படும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் வேலைப்பழுவும் கூடும். பதவி உயர்ச்சி முதலியன பேச்சளவிலேயே இருக்கும். பொறுமையும் நிதானமும் உடையவர்கள் நன்மை பெறுவர்.


விவசாயிகளுக்கு இந்த மாதம் பயிர்விளைச்சல் அதிகரிக்கும். ஆனால் பயிர் உற்பத்திச் செலவுகளும் கூடுதலால் எதிர் பார்த்த லாபம் கிடைப்பது கடினம். சந்தைப் படுத்துவதில் விரையமேற்படும்.

தொழிலாளர் பொதுவாக போதிய வருமானம் பெறுவது கடினம். ஆனால் இயந்திரம் சம்பந்தமான ஆலைத் தொழிலாளர் நல்ல வருமானம் பெறுவர். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் எதிர் பார்த்த லாபம் கிடையாது:

மாணவர் கல்விக்குழப்பநிலை தொடர்ந்தாலும் சுயமுயற்சியால் கல்வியில் முன்னேற்றம் பெற முடியும். கலைத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்திகளும் பெறுவர். சிலருக்கு வெளிநாட்டுக் கல்வியும் கிட்டும்.

பெண்களுக்கு தடைகளின் மேல் காரிய சித்தி கிடைக்கும். ஆனால் விவாகப் பிரச்சினைகள் முடிவில்லாமல் நீளும். வீட்டில் நிகழும் சிறுசிறு மங்கல காரியங்கள் குடும்ப பெண்களுக்கு மன நிறைவாகும்

அதிஷ்ட நாட்கள்: மே 18,19,22,23,27,28,31;
ஜூன் 1பக.10,14,
துரதிஷ்ட நாட்கள்: மே 20,21. ஜூன் 2,3,7,8.




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசிரிடம் 1,2-ம் கால்

இடபராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 1ல் (சென்மத்தில்) லோகமூர்த்தியாகப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் நற்பலன்களை அதிகம் எதிர் பார்க்க முடியாது. ஆனால் குரு பகவானின் சுப கோசாரசஞ்சாரம் நிகழ்வது நன்மை தரும். பொதுவாக இவர்களின் தேகசுகம் குடும்ப சுகம் என்பன சீராகவே இருக்கும். பொருள் வருமானமும் கூடும். இராசாங்க உதவிகள் கிடைப்பது கடினம். சிலருக்கு அரசாங்க அதிகாரிகளின் தொல்லைகளும் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை, எவ்வாறுயினும் வீட்டில் சுபமங்கள கொண்டாட்டங்கள்-பெரியோர் உறவினர்களின் உதவி ஒத்தாசைகள்-தூரதேசப் பொருள் வரவுகள்-காரிய சித்திகள் முதலியனவும் நிகழச் சாதகமான காலம்.

குடும்பத்தில் மனமகிழ்ச்சியான சம்பவங்கள் பெரும்பாலும் நிகழும். புத்திரர் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். குடும்ப வருமானமும் கூடும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் இந்த மாதமும் சிறப்பாக நடக்கும். ஆனால் எதிர் பார்த்த லாபம் கிடைப்பது கடினம். ஆனால் வாடிக்கையாளர் வரவும் கூடும். ஆடம்பர-அழகு சாதனப் பொருள் வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவர்.

உத்தியோகதர்களுக்கு மேலதிகாரிகளின் துன்புறுத்தல்கள் அதிகரிக்கும். வேலைப்பழுவும் கூடும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகள் கிடைப்பதால் எதனையும் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவுகள் கணிசமாகக் குறையும், ஆனால் விளைச்சல் கூடும். விளைவுகளைச் சந்தைப் படுத்துவதிலும் முன்னேற்றம் உண்டாகும். விவசாயப் பண்ணைகளிலும் லாபம் கிடைக்கும்.

தொழிலாளர் பெரும்பாலும் வேலைவசதிகள் பெறுவர். தினச் சம்பளம் வாங்கும் தொழிலாளர்கள் போதிய வருமானம் பெறுவர். தொழில் பிணக்குகள் பெரும் பாலும் நீங்கி விடும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நல்ல லாபம் கிட்டும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். பொதுவாக மாணவரின் தன்னம்பிக்கையும், சுயமுயற்சியுடன் கூடிய ஊக்கமும் கூடுதலால் சிறப்புச் சித்திகளும் பெறுவர். சட்டத்துறை-கலைத்துறை மாணவர் பரிசில்கள் பெறுவர்.

பெண்களுக்குப் பெரும் பாலும் காரியசித்திகள் இந்த மாதத்தில் உண்டாகும். கன்னிப் பெண்களின்-காதல் விவகாரங்கள்-விவாகமுயற்சிகள் கைகூடிவிடும். சுபமங்கள கொண்டாட்டங்களால் குடும்பப் பெண்கள் பூரிப் படைவர்.

அதிஷ்ட நாட்கள்: மே 16,20.21,25,29.
ஜூன் 2,3,12,13.
துரதிஷ்ட நாட்கள்: மே 22,23. ஜூன் 5,6பக,10.




மிருகசிரிடம் 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுன ராசியிற் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 12-ல் (விரையத்தில்) தாம்ர மூர்த்தியாகப் பவனி வருவதால் சுப பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. மேலும் சென்ம வியாழனும், அட்டமத்தில் சனியுமாக கோசார சஞ்சாரம் செய்வதும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். பொதுவாக உடல்நல, குடும்பநல பாதிப்பு வருமானத்திலும் செலவுகள் இராசாங்க துன்பம்-

காரியத்தடை, அலைச்சல், நண்பர்கள் - உறவினர்கள் புத்திரர்கள் மூலம் துன்பங்கள் - பொருள் இழப்பு அந்நிய தேச சஞ்சாரம், கரந்து வாழுதல் முதலானவை பெரும்பாலும் நிகழும். தசா புக்தி அந்தர பலம் உடையவர்கள் அதிகம் பாதிப்படைய மாட்டார்கள். மற்றவர்களுக்குத் தெய்வ வழிபாடுகள் ஆறுதல் தரும்.

குடும்பத்தில் பெரும்பாலும் அமைதிக்குறைவு காணப்படும். குடும்ப பிணி - பீடைகள் சச்சரவுகள் அடிக்கடி ஏற்படுதலால் கவலை ஏற்படும். வீட்டில் துக்க சம்பவங்கள் நிகழ்ந்தாலும் ஆச்சரியமில்லை.

வர்த்தகர்களுக்கு இந்த மாதமும் வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். ஆனால் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. வியாபார முதலீடுகளுக்கு நிதி நெருக்கடிகள் தடையாக இருக்கும். கறுப்புச் சந்தை வியாபாரிகள் நட்டம் பெறுவர்.

உத்தியோகத்தர்கட்குச் சூரியன் பலம் குன்றுவதால் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். சிலர் வேலை நீக்கம் அல்லது தாமாக வேலை விட்டு நீங்கினாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு இந்த மாதமும் பயிரழிவு தொடரும். உற்பத்திச் செலவும் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் குன்றும். நட்டம் ஏற்பட்டு கடன்பழு ஏறுவதுடன் வாழ்க்கைத் தரமும் குன்றும்.

தொழிலாளருக்கு இந்த மாதம் வேலையில்லா திண்டாட்டம் ஏற்படுதலால் பலமுனைத் தாக்கங்கள் உண்டாகும், பெரும்பாலும் விபத்து, தொழிலிழப்பு முதலியன இடம்பெற்றாலும் ஆச்சரியம் இல்லை. ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவது கடினம்.

மாணவர் கல்வி முன்னேற்றத்துக்குத் தடைக் காரணிகள் வலுவடையும். மாணவர் மத்தியில் ஏமாற்றம் - வெறுப்பு - மனக்குறை முதலானவை ஏற்படும். பரீட்சைகளில் சித்தி பெறுவதும் கடினம்.

பெண்களுக்குப் பொறுமைக்கு சோதனைகள் பல இடம் பெறும் மாதம். எந்த முயற்சியிலும் ஏமாற்றம் - வீண் அலைச்சல் – அவமானம் முதலியன ஏற்படும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகளும் இழுபறி நிலையில் இருக்கும்.

அதிஷ்ட நாட்கள்: மே 18, 22, 27, 28, 31.
ஜூன் 5, 14.

துரதிஷ்ட நாட்கள்: மே 16, 25, 26, அ.கா.
ஜூன் 7, 8, 12, 13.



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இந்த ராசியில் ஜெனனமானவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 11-ல் சுவர்ண மூர்த்தியாக வலம் வருவது நன்மையாகும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்த மாதத்தில் பெரும்பாலும் மனநிறைவு உண்டாகும். தேகசுகம், குடும்ப சுகம் என்பனவற்றில் முன்னேற்றம் உண்டாகும் பொருள் வருமானம் கூடும். முன்பு தடைப்பட்டு இழுபறியாக இருந்த காரியங்களிலும் சித்தி பெறுவர். இராசாங்க உதவி, அந்நியருதவி அந்நியதேசப் பொருள் வரவு, விற்றல் வாங்கல் மூலம் லாபங்கள், வீடு வாகனச் சிறப்பு முதலானவை நிகழும். எனினும் குரு பகவான் 12-ல் சஞ்சாரம் செய்வதால் வீண்செலவு இனசன பந்துக்களின் பகை விரோதம் - புத்திரர் வழியில் கவலை முதலானவையும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் பிணி பீடைகள் இடைக்கிடை தோன்றி மறையும், குடும்ப வருமானம் திருப்தி தரும். புத்திரர் - உறவினர் - உதவி ஒத்தாசைகள் பெறுவதும் கடினம் பிதாவழி உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். முதலீடுகளிலும் வருமானம் வரத்தொடங்கும்: முக்கியமாக இரத்தின வியாபாரிகள், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் அதிக லாபம் பெறுவர்

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலமும், ஸ்தான பலமும் பெறுவது நன்மையே. மேலதிகாரிகளின் நல்லெண்ணம் கிட்டும். பதவிச் சிறப்பு முதலியனவும் கிடைக்கச் சாதகமான காலம். உதவிகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் கணிசமாகக் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் விளைவு அதிகரித்து லாபம் கிடைக்கும். விளைச்சல்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பும் கிட்டும். வாழ்க்கைத் தரமும் உயரும்.

தொழிலாளர்களுக்குப் பெரும்பாலும் வேலை வசதிகள் கிடைக்கும். தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்பும் உண்டாகும். எண்ணெய் ஆலைத்

தொழிலாளர் கூடுதல் வருமானம் பெறுவர். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் இலாபமுண்டு.

மாணவர் கல்வித் தடைக்காரணிகள் விலகத் தொடங்கும். மாணவர் மத்தியில் புத்தூக்கமும் சுயமுயற்சியும் தோன்றும். கணிதத்துறை - கலைத் துறை மாணவர் சிறப்புச் சித்தி பெறுவர்.

பெண்களுக்கு தடை தாமதங்களின் மேல் காரிய சித்திகள் உண்டாகும். கன்னிப் பெண்க ளின் விவாக முயற்சிகளிலும் வெற்றி கூடும். உத்தியோகப் பெண்களுக்கும் மனநிறைவுண்டு.

அதிஷ்ட நாட்கள்; மே 20. 21. 25, 29.
ஜூன் 2, 3, 7. 8.

துரதிஷ்ட நாட்கள்: மே 18, 19, 27, 28.
ஜூன் 10, 14.



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியில் சென்னமானவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் 10-ல் ரஜத மூர்த்தியாக பலத்துடன் வலம் வருவது நன்மை தரும். தேக நலம் - குடும்பநலம் என்பன சிறப்பாக இருக்கும் எடுத்த முயற்சிகளிலெல்லாம் பெரும்பாலும் வெற்றி பெறுவர். இராசாங்க உதவிகள், வீடு-வாகனச் சிறப்பு, இனசனக் கொண்டாட்டம். வீட்டில் மங்களக் காரியங்கள், குரு முதலிய பெரியவர்களின் உதவிகள் அந்நியதேசப் பொருள் வரவு முதலியனவும் நிகழும். குரு - சனி இவர் களின் சுபகோசார சஞ்சாரமும் சேர்வது மேற் கூறிய பலன்களுக்கு அதிகம் சார்பாகும். சிலர் புண்ணிய யாத்திரைகள் கூடச் செய்யக்கூடும். எனினும் செவ்வாயின் சஞ்சாரம் பலமின்மை யால் விபத்து - கருவி - விஷ - அக்கினி பயம் சகோதர பீடை பொருள் நட்டம் முதலியனவும் கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு மன மகிழ்ச்சியான சம் பவங்கள் பெரும்பாலும் நிகழும். பெரியோர் உதவி ஒத்தாசைகளும் பெறுவர்.

வர்த்தகர்களுக்கு இந்த மாதமும் வியாபார முன்னேற்றம் தொடரும். நிலுவைக்கடன்களும் வந்து சேரும், வாடிக்கையாளரின் வருவகை அதி கரிக்கும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் அதிக இலாபமடைவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் பெறு வதால் மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக் கும். பதவிச் சிறப்பு, பதவி உறுதிப்படுத்துதல் முதலான சிறப்புக்களும் பெறுவர். மன நிறை வான இடமாற்றமும் கிட்டும்

விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் அதிகரிக் கும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். மருந்து, பசளை முதலானவையும் உரிய தேவைக்கு வந்து உற்பத்தி பெருகும். லாபம் கூடும்.

தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கமும் கூட்டு முயற்சிகளும் ஏற்படும். இரும்பு - எண் ணெய் - சுரங்கம் சம்பந்தமான தொழிலாளர்கள் அதிக வருமானம் பெறுவர். தொழில் ஒப்பந்த வேலைகளும் லாபம் தரும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். மாணவர் மத்தியில் தன்னம்பிக்கையும், சுய முயற்சியும் ஏற்படும். பொறியியல் சட்ட மருத் துவத் துறை மாணவர்கள் சிறப்புச் சித்திகளும், புலமைப் பாிசில்களும் கூடப் பெறுவர்.

பெண்கள் சமயோசித புத்தியால் பெரும்பா லும் காரிய சித்தி பெறுவர். கன்னிப்பெண்க ளுக்கு விவாக சித்தியும் ஏற்படக்கூடும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் ஒத்துழைப்பும் ஆறுதல் தரும்.

அதிஷ்ட நாட்கள். மே 22, 23, 27, 31.
ஜூன் 5, 10.

துரதிஷ்ட நாட்கள்: மே 16, 20, 21, 29.
ஜூன் 12 13.



## கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

இந்த ராசியில் சென்னமானவர்களுக்கு சூரிய பகவான் 9-ல் லோகமூர்த்தியாக வலம் வருகிறார் மற்றும் பிரதான கிரகங்களான குரு - சனி செவ் வாய் இவர்களின் கோசார சஞ்சாரமும் சாதக மாக அமையவில்லை. அதனால் இவர்களின் தேக நலம் - குடும்ப நலம் என்பன இடைக்கிடை குன்றும். பொருள் வருமானமும் குன்றும். எதிர் பாராத திடீர் நெருக்கடிகளால் செலவுகளும்

கூடும். கடன் பயம், அலேச்சல் மூலம் காரிய சித்தி, அந்நியதேச சஞ்சாரம், இனசனபந்துக்கள் பகை விரோதம் - இராசாங்க பயம் - பிதிர்வழிக் கருமாதிகள் - இடப்பிரிவு - சத்திரசிகிச்சைப் பயம் முதலானவை நிகழும். தெய்வ பக்தி வழிபாடு களால் சாந்தி பெற முடியும்.

குடும்பத்தில் சிறு சிறு பிணக்குகள் அவ்வப் போது தோன்றி மறையும். குடும்ப வருமானத் திலும் செலவுகள் கூடும், புத்திரர் உதவிகள் கிடைப்பதும் கடினம். பகை விரோதங்களும் ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு மாத ஆரம்பத்தில் இருந்த வியாபாரம் மாதக் கடைசியில் குறைந்து மந்த நிலேயடையும். எனினும் வாடிக்கையாளர் ஒத் துழைப்புக் கிட்டும். ஆனுல் கடன் நிலுவைகள் அறவிடுவதில் கஷ்டங்கள் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு கெடுபிடிகள் அதி கரிக்கும். சிலருக்குக் கஷ்டப் பிரதேச இடமாற் றம், பதவி இறக்கம் முதலியன கிடைத்தாலும் ஆச்சரியமில்லே. வேலேப் பொறுப்பு செலவு கூடும்.

விவசாயிகளுக்கு இயற்கை செயற்கை ஏதுக் களால் பயிர் அழிவு உண்டாகும். உற்பத்திச் செலவுகள் கூடுதலால் இலாபம் பெறுவதும் கடி னம். கடன் பட்டு விவசாய முதலீடுகள் செய்வ தைத் தவிர்த்தல் நல்லது.

தொழிலாளருக்கு வேலேயில்லாப் பிரச்சினே வேதனே தரும். தொழில் பிணக்குகள், வேலே நிறுத்தம் முதலியனவும் இவர்களேப் பாதிக்கும். நாளாந்த சீவியத்துக்கும் வருமானம் கிடையாது. ஒப்பந்த வேலேகளிலும் நட்டம் ஏற்படும்.

மாணவர் கல்விக் குழப்ப நிலே தொடரும். மாணவர் மத்தியில் விரக்தியும் - ஏமாற்றமும் உண்டாகும். எனினும் சுயமுயற்சியுடையவர்கள் பரீட்சைகளில் சித்திபெற முடியும்,

பெண்களுக்குப் பெரும்பாலும் காரியத் தடை கள் ஏற்படும். விவாகப் பிரச்சினேகள் இழுபறி நிலேயில் இருக்கும். விடாமுயற்சியால் சிலர் விவாகசித்தி பெறக்கூடும். குடும்பப் பெண்கட்கு பிரச்சினேகள் கவலே தரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 16, 25, 29.
ஜூன் 2, 3, 7, 8, 12, 13.
துரதிஷ்ட நாட்கள்: மே 18, 22, 23, 31.
ஜூன் 1 பக 14.



# துலாம்

**சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 8ல் தாம்ரமூர்த்தியாக வலம்வருவது நன்மைதராது. ஆனுல் வியாழபக வான் திரிகோணத்தில் இருந்து சுபகோசார சஞ் சாரமும் திருஷ்டியும் செய்வது நன்மைதரும். பொதுவாக இவர்களின் தேகநலம் குடும்பநலம் என்பன சீராக இருக்கும். பொருள்வருமானமும் அதிகரிக்கும். முன்பு தடைப்பட்டு இருந்த காரி யங்களில் கூடச் சாதகமான வெற்றியும் பெறு வர். நண்பர்கள், உறவினர்கள், புத்திரர், முத லியோரின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். வீடு, வாகன சிறப்பு, மங்கள காரியங்களும் நிக ழும். அலேச்சல் ஏமாற்றம் முதலியனவும் சில ருக்குக் கிடைக்கும்.

குடும்பத்தவர்களுக்கு வீட்டில் நிகழும் மங் கள காரியங்கள் மகிழ்ச்சி தரும். அதனுல் செலவு களும் அதிகரிக்கும். பெரியோருதவிகள் புத்திர ருதவிகளும் கிடைக்கும் கணவன் மனேவி நல்லு றவும் வளரும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். வாடிக்கையாளர்களின் ஆதரவும் அதி கரிக்கும். ஆனுல் கடன் நிலுவைகள் பிரச்சினே களேத் தரும். தானிய ஆபரண வியாபாரிகள் லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்கட்குச் சூரியன் பலம் குறை வது கருத்து வேறுபாடுகளேத் தரும். வேலேப் பொறுப்புக்கள் கூடும். ஆனுல் பதவியுயர்ச்சி இழு பறியாகவே இருக்கும்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் கூடி ஞலும் நல்லவிளேச்சல் பெறுவதால் லாபம் பெறு வர். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிட்டும். விவசாயப்பண்ணேகளிலும் லாபம் பெறுவர்.

தொழிலாளர்களுக்குச் சாதாரணமாக வேலே வாய்ப்புக்கள் அதிகரிக்கும், ஆனுல் வருமானத்தில் சேமிக்கக்கூடிய மிச்சம் வராது. தொழில் ஒப் பந்த வேலேகளிலும் லாபம்பெறுவது கடினம்.

மாணவர் கல்வியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டுவர். ஆசிரியர் மாணவர் மத்தியில் நல்

விணக்கமும் ஏற்படும். சட்டத்துறை கணிதத் துறை மாணவர்கள் சிறப்புச்சித்தி புலமைப் பரிசில்கள் பெறுவர்.

பெண்களுக்கு மனநிறைவான சம்பவங்கள் பெரும்பாலும் நிகழும். விவாகமாகாதவர்களுக்கு விவாக சித்தியும் ஏற்படும. கணவன் மனைவி ஒற்றுமை குடும்பப் பெண்களுக்கு நிறைவுதரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 18,19,27,28,31;
ஜூன் 1,5,10,14.

துரதிஷ்ட நாட்கள்: மே 20,22,25.
ஜூன் 2,3,4.




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 7ல் ரஜஸ மூர்த்தியாக வலம் வருவதால் நன்மை, தீமை கலந்த பலன்களே நிகழும். பொதுவாக உடல்நலம் இடைக்கிடை குன்றும். குடும்பநலம் சீராக இருக்கும். பொருள் வருமானங்கூடினாலும் செலவுங்கூடும். அலைச்சல்மூலம் காரியசித்தியும் பெறுவர். இராசாங்க உதவி, அந்நியர் உதவி, அந்நியதேசப் பொருள்வரவு, பூமி, வீடு, விருத்தி, போசனமூலம், துன்பம் விபத்து சத்திரசிகிச்சைப் பயம் இனசனபந்துக்கள் விரோதம் முதலான பலன்கள் நிகழும். சாதாரணமாக இவர்களுக்கு "சாணேற முழம சறுக்கும்" என்றபடி காரியங்கள் நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு செலவுகள் அதிகரிக்கும். கணவன் மனைவி கருத்துவேறுபாடுகளும் தோன்றும். புத்திரர் உறவினர் துன்பம் தருவர். பெரியோர்கள் அயலவர்களுடன் பகை விரோதங்களும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு புதன் பலம்பெறுவதால் வியாபாரம் முன்னேற்றம் காணும். முதலீடுகளின் வருமானமும் கூடும். இரும்பு, எண்ணெய், இயந்திரவகை, மருந்துகள் வியாபாரம் செய்வோர் அதிகலாபம் பெறுவர்,

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் அதிகாரிகளின் நல்லெண்ணம் கிடைக்கும். ஆனல் பதவியுயர்ச்சி முதலியன இழுபறியாகவே இருக்கும்,

விவசாயிகளுக்கு சனி பலம்பெறுவது பயிர் விளைச்சலை அதிகரிக்கச் செய்யும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் விளைச்சலுக்கு நல்ல சந்தைவாய்ப்பும் கிடைப்பதால் லாபம் பெறுவர்.


தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுவதுடன் வேலைவசதிகளும் அதிகரிக்கும். தினச்சம்பளம் பெறுபவர்களும் நல்ல வருமானம் பெறுவர். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் வரும். விபத்துக்களைத் தவிர்க்க அவதானம் தேவை.

மாணவர் சுயமுயற்சியால் முன்னேற்றம் பெறுவர். இவ்வளவு காலமும் தொடர்ந்த கல்வித்தடைக் காரணிகள் நீங்கத்தொடங்கும். பரீட்சைமுடிவுகளும் திருப்திதரும்; மருத்துவ பௌதிகத்துறை மாணவர் சிறப்படைவர்.

பெண்களுக்குத் தடைதாமதங்களின் மேல் காரியசித்தி ஏற்படும். விவாகமாகவேண்டியவர்களுக்கு விவாகப்பிரச்சினை இழுபறிநிலையில் தொடரும். கணவன் மனைவி பிணக்குகளால் பெண்களுக்கு மனக்குழப்பமும் ஏற்படலாம்.

அதிஷ்ட நாட்கள்: மே 16,20,21,29.
ஜூன் 2,3,7,8,12.

துரதிஷ்ட நாட்கள்: மே 22,23,27.
ஜூன் 1,4,5.




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 6ல் சுவர்ணமூர்த்தியாக வலம்வருவது நன்மைதரும்; கடந்த காலங்களில் பட்ட கஷ்டநட்டங்கள் நீங்கத்தொடங்கும். இவர்களின் தேகநலம் குடும்பநலம் என்பவற்றில் முன்னேற்றம் உண்டாகும். பொருள் வருமானமும் கூடும். முன்பு தடைப்பட்டு இழுபறிநிலையில் இருந்த காரியங்களில் வெற்றிபெறுவர். பெரியோர் உதவி- இனசன பந்துக்கள் கூட்டம் நண்பர்கள் புத்திரர் உதவி ஒத்தாசைகள், வீட்டில் மங்கள நிறைவுகள் இராசாங்க உதவிகள் முதலியனவும் உண்டாகும். எனினும் ஏழரைச் சனீஸ்வரனின் காலமும் தொடருவதால் அலைச்சல், ஏமாற்றம், பொருள்நட்டம், பந்துசனதுன்பம் முதலியனவும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் கணவன் மனைவி கருத்து வேற்றுமைகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்பவருமானம் கூடும். புத்திரர் முதலான உறவினர்களுக்குள் கொண்டாட்டங்களும் நிகழும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம்பெறுவதால் வியாபாரம் முன்னேற்றம் காணும்; உணவுப் பண்டங்கள் தானியவியாபாரிகள் கூடிய லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம்பெறுவது நன்மையாகும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். பதவிச்சிறப்பு, பதவி உறுதிப்படுத்துதல் முதலானவையும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதமும் உற்பத்திச் செலவுகளும் கூடும்; கூலியாட்களின் தொல்லைகளும் ஏற்படும்; எதிர்பார்த்த விளைச்சல் பெறுவது கடினம்,

தொழிலாளர்களுக்குப் பெரும்பாலும் வேலை வசதிகள் கிடைக்கும். தினச்சம்பளம் பெறுவோருக்கும் சீவனக்கஷ்டம் ஏற்பட இடமில்லை. தொழிலுடன் சம்பந்தப்பட்ட விபத்து ஏற்படலாம்.

மாணவர் கல்விமுன்னேற்றம் இந்த மாதமும் தொடரும். ஆசிரியர்-மாணவர் மத்தியில் நல்லிணக்கமும் ஒத்துழைப்பும் வலுவடையும். பரீட்சைகளில் சித்தியும் பெறுவர்

பெண்கள் சிலதடைகளைச் சமாளிப்பதால் காரிய சித்திபெறுவர். விவாகமாகாதவர்களுக்கு விவாகசித்தியும் காதல் விவகாரங்களில் மனநிறைவான முன்னேற்றமும் பெறுவர்.

அதிஷ்டநாட்கள்: மே 18,19,22,23,31
ஜூன் 5,10,14
துரதிஷ்டநாட்கள்: மே 25,29 ஜூன் 7,8




உத்தராடம் 2 3 4, திருவோணம், அவிட்டம் 1,2

மகராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 5ல் லோகமூர்த்தியாகப் பலக்குறைவுடன் வலம் வருவது நன்மைதராது. ஏழரைச் சனீஸ்வரனின் காலமும், 6ல் குருவும் கோசார சஞ்சாரம் செய்வதும் துரதிஷ்டமே! பொதுவாக இவர்களின் தேகசுகம், குடும்பசுகம் என்பன இடைக்கிடை பாதிப்படையும். பொருள் வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும்; எதிலும் ஏமாற்றம் அலைச்சல் வீண்செலவுகளும் ஏற்படும். இனசன பந்துக்களுடன் பகை விரோதங்களும் உண்டாகலாம்.

குடும்பத்தில் கருத்துமாறுபாடுகள், பிரிவுகள் கூட ஏற்படலாம். குடும்பவருமான வீழ்ச்சியும் புத்திரர் துன்பமும் தொடரும். சிலசமயங்களில் வீட்டில் துக்கசம்பவங்களும் நிகழலாம்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தடைப்படும். கவனம் தேவை. நிலுவைக்கடன்களிலும் பிரச்சினைகள் உண்டாகும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்குச் சோதனையான காலம். சிறுசிறு விஷயங்களிலும் மேலதிகாரிகள் சினந்து சீறுவார்கள். பதவிப்பொறுப்பும் வேலைப் பழுவும் வீண்செலவும் உண்டாகும்.

விவசாயிகளுக்கு பயிரழிவு தொடங்குவதால் விளைச்சல் குன்றும், உற்பத்திச் செலவுகள் கூடுவதால் கடன்பயம் ஏற்படும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் வரும்.

தொழிலாளர் மத்தியில் கொந்தளிப்பான சூழ்நிலைகள் ஏற்படும். வேலையின்மையால் சிலர் நாளாந்த சீவனத்துக்கே திண்டாடுவர்.

மாணவர் கல்விமுன்னேற்றத்திற்குத் தடைக் காரணிகள் வலுவடையும். ஆசிரியர் - மாணவர் கருத்துமோதல்கள் இடம்பெறும். விரக்தியும் ஏமாற்றமும் கல்வியைத் தொடராது செய்து பரீட்சை முடிவுகளும் திருப்திதருவது கடினம்.

பெண்களுக்குக் காரியச்சிக்கல்கள் இந்தமாதத்தில் உண்டாகும். காதல் விவகாரங்கள் ஏமாற்றத்திலும் முடியும். விவாகப்பிரச்சினைகள் இழுபறியாகத் தொடரும். பெண்களுக்குச் சோதனையான காலம்.

அதிஷ்டநாட்கள்: மே 16,20,21,25
ஜூன் 2,3,7,8,12
துரதிஷ்டநாட்கள்: மே 27,28,31 ஜூன் 1,10




அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1,2,3 ம் கால்

இவ்விராசியினருக்கு இம்மாதம் சூரியபகவான் 4ல் சுவர்ண மூர்த்தியாக வலம்வருவது நன்மையே

இவர்களின் தேகசுகம், குடும்பசுகம் என்பன சீர் பெற்றிருக்கும். பொருள் வருமானத்திலும் முன்னேற்றமேற்படும். இராசாங்க உதவிகள், பந்து மித்திரர் கொண்டாட்டம், வீடுவாகனச் சிறப்பு, முன்பு தடைப்பட்டு இழுபறியாகவிருந்த காரியங்கள் சித்திபெறுதல் விற்றல் வாங்கல் மூலம் லாபம் வீட்டில் மங்கள காரியங்கள் நிகழுதல் முதலான சுபபலன்கள் அதிகம் நிகழும். எனினும் ஏழரை சனீஸ்வரனின் காலமுந்தொடருவதால் அலைச்சல் ஏமாற்றம், அந்நியதேச சஞ்சாரம், கடன்பயம், தொல்லை முதலியனவும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். புத்திரர்- உறவினர்களின் உதவி ஒத்தாசைகளும் கிட்டும். குடும்பவருமானம் அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளால் கடன்பயமேற்படும்.

வர்த்தகர்களுக்கு வருமானம் வரத்தொடங்கும்; பழைய நிலுவைக் கடன்களால் வீண்செலவும் ஏற்படும். வங்கி நிதியிருப்பு திருப்தி தரும். உலோக – ஆபரண-அழகு சாதனப்பொருள் வியாபாரிகள் நல்ல லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். பதவியுயர்ச்சி போன்றனவற்றிற்குக்கூட சிபாரிசு செய்யப்படுவார்கள். ஒத்துழைப்புக்களும் கிட்டும்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் அதிகரித்தாலும் விளைச்சலுங்கூடும், நல்ல சந்தை வசதியும் கிடைக்கும். லாபங்குறையினும் நட்டம்வர இடமில்லை,


தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் ஓரளவு கிடைக்கும். தினச்சம்பளம் பெறுவோரின் சீவன வாழ்க்கை முன்னேற்றங்காணும். ஒப்பந்த வேலைகளிலும் ஒத்துழைப்புக்களால் லாபம் கிட்டும்.

மாணவர் கல்வி வளர்ச்சி இந்தமாதமும் தொடரும். ஆசிரியர் மாணவர் கருத்தொற்றுமை வளரும். மாணவர் மத்தியில் கல்வியூக்கமும் வளரும். பரீட்சை முடிவுகளில் மனநிறைவு ஏற்படும்,

பெண்களுக்கு முயற்சிகள் பலன்தரும் மாதம் கன்னிப் பெண்களின் காதல் முயற்சிகளிலுஞ்சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். சிலருக்கு விவாக சித்தியும் கிட்டும். ஆறுதல் தரும் மாதம்.

அதிஷ்ட நாட்கள்.- மே 18, 22, 23, 27, 28
ஜூன் 5, 10, 14

துரதிஷ்ட நாட்கள்:- மே 16, 29
ஜூன் 2, 3, 12, 13



# மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 3ல் தாம்ர மூர்த்தியாக வலம் வருவதால் நன்மை, தீமை கலந்த பலன்கள் நிகழும். பொதுவாக இவர்களின் தேக-குடும்ப சுகங்கள் சீராகும். பொருள் வருமானங்கூடும். இனசனப் பகை விரோதம், அந்நியருதவி, அந்நியதேசப் பொருள் வரவு, மேற்கு-தென்மேற்குத் திசையில் அனுகூலம் அலைச்சல் மூலம் காரியசித்தி, இராச தண்டனை முதலான சுபாசுப பலன்கள் நிகழும்.

குடும்பத்தவர்கட்கு செலவுகள் கூடுதலாகி கடன் பழுவுங்கூடும்; கணவன் - மனைவி பிணக்குகள், புத்திரர்களால் கஷ்டங்கள், ஏற்படலாகும். அந்நியருதவியால் ஆறுதல் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் இந்தமாதமுந் தொடரும். ஆனால் லாபமும் நிதி வசதிகளும் குறையும். பழைய நிலுவைக் கடன்கள் பிரச்சினை தரும்; முதலீடுகளைத் தவிர்க்க,

உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகரிக்கும். பதவியுயர்ச்சி கேள்விக்குறியாகத் தானிருக்கும். அநாவசியச் செலவுகளால் வருமானப் பற்றுக்குறைவு ஏற்படும்,

விவசாயிகளுக்குப் பயிர் விளைச்சல் மன நிறைவைத்தரும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிட்டும். விளைவுகளைச் சந்தைப் படுத்துவதில் தரகர் தலையீட்டால் எதிர்பார்க்கும் லாபம் வராது.

தொழிலாளர்கட்கு வேலைவசதிகள் கிட்டும். ஒற்றுமை உடன்பாட்டால் தொழிலாளர் வசதிகள் பெருகும். ஒப்பந்த வேலைகளிலும் லாபமே.

மாணவர்கட்கு முன்னேற்றந் தொடரும். ஆசிரியர்-மாணவர் நல்லிணக்கம் வளரும். சுய முயற்சியுடன் மாணவர் கல்வியைத் தொடருவர். சிறப்பான பலன்பெறுவோர் பௌதிகத் துறையினர்.

பெண்களுக்குத் தடைகளின் மேல் காரிய சித்திபெறுவர். கன்னிப்பெண்களின் காதல்முயற்சிகள் இழுபறியாகத் தொடரும். சமயோசிதபுத்தியுடன் செயல்படுவதால் சிரமத்துக்கு மத்தியில் விவாகசித்தியும் பெறுவர்;

அதிஷ்டநாட்கள்: மே 16, 20, 21, 25, 29
ஜூன் 7, 8, 12, 13

துரதிஷ்டநாட்கள். மே 18, 19, 31, ஜூன் 5, 14

# சூரியன் குஜன் இணைவால் உத்தியோகச் சிக்கலா?

ஏ. எல். ராஜா, கண்டி.

சந்: உச்சம்பெற்ற ராகு, கேதுக்கள் தமது மகாதசைகாலங்களில் நன்மையான விளைவுகளையா பாதகமான விளைவுகளையா தரும்?

நிவி: ராகு, கேதுக்கள் உச்சம் பெற்றிருந்தாலும் அவை லக்கினத்துக்கு எத்தனையாம் இடமாக அமைகின்றது, என்ன நட்சத்திரத்தில் இருக்கின்றது எக்கிரகங்கள் திருஷ்டிக்கின்றன என்பனவற்றைக்கொண்டே பதில்கூறவேண்டும்.

த. விஜயரத்தினம், 3-ம் வாய்க்கால், கிளிநொச்சி.

சந்: கிரகமகதசா புத்திகளைக் கணிக்கும் போது சௌரமானப்படியா அல்லது சாவனமானப்படியா கணித்தல் வேண்டும்.

நிவி: 30 நாள் கொண்டது ஒருமாதம் எனவும், 12 மாதம் கொண்டது ஒருவருடம் எனவும் கணிக்கப்படுகின்றது.

## ★ சந்தேக நிவிர்த்தி ★ 'உத்தரம்'

எஸ். எச். எம் றசீம், கல்முனை-7

சந்: கெட்ட கிரகமான சனி 4-ம் வீட்டிலிருந்து அவ்வீடு லக்கினத்துக்கு 4-ம் வீடாக (சனியின் வீடாக) இருந்தால் எப்படியான பலனுண்டு?

நிவி: நீங்கள் குறிப்பிட்டபடி துலாலக்கினமாக அமைந்து 4-ம் வீட்டில் சனி ஆட்சிப் பெற்றால் அவர் யோககாரகனாகி தன்னுடைய தசா புத்தி காலங்களில் நன்மையைச் செய்வார்; விருச்சிகலக்கினமாகி 4-ல் சனி ஆட்சிப் பெறின் நற்பலன்களை எதிர் பார்க்க முடியாது.

வே.சிவானந்தன், வியாபாரிமூலை.

சந்: ஹோமம் என்பதன் பொருள் என்ன? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?

நிவி: ஒரு கும்பத்திலோ, அல்லது பிம்பத்திலோ ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை ஆவாகித்து அதனருகிலே அக்கினியை ஜொலிக்கச் செய்து அந்த அக்கினியில் திரவியங்களை அர்ப்பணித்தலே "ஹோமம்" எனப்படும். அக்கினியில் எந்தத் தெய்வத்தைக் குறித்து ஹோமம் செய்கின்றோமோ அக்கினிதேவன் அதனைப் பெற்று அக்குறிப்பிட்ட தெய்வத்துக்குக் கொண்டு சென்று சமர்ப்பிப்பான். இதனால் அத்தெய்வத்தின் அனுக்கிரகம் எமக்குக் கிட்டும் என்பதாகும்.

கே.இன்பரூபன், நுணாவில், சாவகச்சேரி,

சந்: எனது ஜாதகத்தில் சூரியனும், செவ்வாயும் இணைந்திருப்பதால் உத்தியோகத்தில் இடையூறு ஏற்படும் எனச் சிலர் கூறுகின்றனர். இது 10-ம் இடம் எனில் பாதிப்பேற்படலாம் என்றும், எக்கிரக பார்வையும் இல்லாது குருவின் வீடாக அமைவதால் உயர்ச்சி ஏற்படும் என்றும் சொல்கிறார்கள். தங்கள் பதில் என்ன?

நிவி: ஜாதகத்தில் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் இடையூறு ஏற்படும் எனச் சொல்ல முடியாது. சூரியன் 10ல் இருப்பதால் அரசாங்க உத்தியோகம் போன்ற துறையையும், செவ்வாய் இருப்பதால் வைத்தியம், போர் முதலிய மனத்துணிவுமிக்க தொழில்களையும் கொடுப்பான். ஆனாலும் 10-ம் வீட்டு அதிபதியின் தன்மை அவ்வீட்டைத் திருஷ்டிக்கும் கிரகங்களின் தன்மை என்பவற்றைக் கொண்டே தொழிலை நிர்ணயம் செய்யவேண்டும். 10-ம் வீடு குருவின் வீடாக இருப்பினும், அவரின் பலத்தை அறியவேண்டும்.

க. இன்பரூபன், நுணாவில், சாவகச்சேரி.

சந்: ஒரு மிதுனலக்கின ஜாதகருக்கு 7-ம் வீட்டை அவ்வீட்டதிபதி குரு பார்க்கும்போது நல்ல களத்திரம் கிட்டும் எனத்தாங்கள் ஒரு சோதிடமலரில் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் வேறொருவர் கூற்றுப்படி குரு பார்வையால் களத்திரதோஷம் ஏற்படும் என்றும், கேந்திராதிபத்திய தோஷமடைந்தவர் என்றும் இதனால் நற்பலனைக் கொடுக்கமாட்டார் என்றும் கூறுகிறார். தங்கள் கருத்து என்ன?

நிவி: குரு 7-ம் வீட்டைப் பார்த்தால் களத்திரதோஷம் என்று சொல்லமுடியாது. குரு பார்த்தால் கோடிதோஷம் நீங்கும் என்பார்கள். நீங்கள் குறிப்பிட்டபடி கேந்திராதிபத்திய தோஷமுடைய குரு 7ல் இருந்தால் தோஷமுண்டு. 7-ம் வீட்டைப் பார்த்தால் தோஷமில்லை.

எஸ். இராசரத்தினம், நடுத்தெரு, காரைநகர்.

சந்: அஸ்தமனமடைந்த கிரகங்கள் ஒரு ஜாதகரின் வாழ்க்கைப் பிற்பகுதியில் நற்பலன் செய்யும் என்ற நியதி அர்த்த புஷ்டியானதா?

நிவி: பொதுவாக அஸ்தமனமடைந்த கிரகங்கள் நற்பலன்களைக் கொடுப்பது குறைவாகவே இருக்கும். வாழ்க்கைப் பிற்பகுதியில் நன்மை தரும் என்பது ஏற்கக்கூடியதல்ல.

(19-ம் பக்கம் பார்க்க)

# விதி வழி ↗ திருமணமும்
# மதி வழி ↘ திருமாங்கல்யமும்

சி. இரத்தினவடிவேல்
அளவெட்டி.

(ஆண்டுமலர்த் தொடர்ச்சி)

1, 10, 19-ம் இரச்சுப் பொருத்தமற்ற நட்சத்திரங்களின் நட்சத்திர அதிபர் ஒருவராக இருப்பதும், பெரும்பாலும் இராசியதிபர் ஒருவருக்கு அல்லது மித்திரராக இருப்பதையும் கவனத்திற் கொள்ளலாம். இவ்விராசியதிபர் பொருத்தமே தூய காதல் அல்லது அன்பில் இருவரின் மனமும் ஆன்மாவும் உடம்பும் ஒன்றோடொன்று ஒன்றித்து இணங்கி இன்பங்காண முக்கியமானது. சோதிட அடிப்படையில் விளக்கமுடையது.

இன்றைய இளம் சந்ததியினரில் குறிப்பாக காதல் வயப்பட்ட இருவர் தம் திருமணத்தை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கும்பொழுது நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ கல்யாணப் பொருத்தங்கள் நட்சத்திர அடிப்படையில் வாய்பாடு பற்றி பார்க்கும்போது இவ்விரச்சுப் பொருத்தம் குறுக்கே வருகின்றது. வேண்டாத வீண் சிரமங்களுக்கு வழி வகுக்கின்றது. காதலுக்குச் சம்மதம் கொடுத்த பெற்றோர்களும் இரச்சுப் பொருத்தம் இல்லை என்றவுடன் பின்வாங்குகின்றனர் - தடையாக இருக்கின்றனர். தாலி அணியாமல் திருமணம் புரிய தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இரச்சுப்பொருத்தம் இல்லை என்பதை அறிந்தவுடன் காதல் திருமணம் தானே கல்யாணப் பொருத்தங்கள் அவசியமில்லை எனக் கண்டும் காணாதது போலாகின்றனர் சிலர். காதல் திருமணம் புரியும் பெரும்பாலோருக்கு இரச்சுப் பொருத்தம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் அல்லது இரச்சுப்பொருத்தமின்மை காரணமாக தாலி கட்டாமல் திருமணம் செய்த தம்பதியினர் ஈருடலும் ஒருயிருமாக வாழ்வதற்குக் காரணம் எல்லாவற்றிலும் சிறந்த பொருத்தமான இராசியதிபர் பொருத்தம் இருப்பதே. இவர்கள் தாலி அணியாமல் திருமணம் புரிந்தாலும் திருமண நாளன்று அணியப்படும் மலர்மாலை தாலிக்குப் பிரதியாகின்றது. எவ்வாறெனில் உலக வழக்கின்படி கல்யாணப்பதிவு மணமாகக் கொள்ளப்படுவதில்லை. சட்டப்படி விவாகஞ் செய்தல் சோதிடத்தில் கொள்ளப்படுவதில்லை. ஐயர் யாத்த கரணம் என்று சொல்லும் சமயச் சடங்கே நம் சமூகத்தில் விவாகம் என்று கொள்ளப்பட்டு வந்தது. அதனையே சோதிடத்திற்கும் கொண்டனர். திருமணத்திற்கு அறிகுறி திருமாங்கல்யம். திருமாங்கல்யம் என்பது யாது? அது எந்தச் சாஸ்திரப்படி நமக்கு வந்துள்ளது?

நம் சாஸ்திரங்கள் எல்லாம் சமஸ்கிருத பாஷையில் உள்ளன. அவை யாவும் ஆரியர் மதப்படி எழுதப்பட்டவை என்பது கொள்கை. ஆரியர் மதப்படி திருமணத்தில் தாலிகட்டும் வழக்கமில்லை. அவர்கள் மதப்படி பாணிக்கிரகணமே திருமணச்சடங்கு. ஆகையால் தாலி கட்டுதற்குச் சாஸ்திர ஆதாரமில்லை. தாலிகட்டும் வழக்கம் திராவிடர் வழக்கம். மாப்பிள்ளை பெண்பிள்ளையின் கழுத்தில் நூலைக் கட்டினாலோ வளையம் ஒன்றினை இட்டாலோ அது தாலிக்குப் பிரதியாகின்றது. அம்முறையில் இன்றிடும் மலர்மாலை தாலியாகின்றது. ஆகையால் சட்டத்துக்கு மட்டுமன்றி நம் தொல்வழக்குக்கும் இன்று கல்யாணப் பதிவன்று கையாளப்படும் முறை விவாகத்திற்குச் சமம் என்று கொள்ளுதல் வேண்டும். இதிலிருந்து தாலி அணிவதனாலோ அல்லது அணியாமல் விடுவதனாலோ சோதிட, சாஸ்திர ரீதியில் இல்லற வாழ்வில் எவ்வித தாக்கங்களும் ஏற்பட இடமில்லை என்பது தெளிவாகின்றது.

மணமக்களின் தெசைகள் ஏககாலத்தில் முடிதலாகா என்றது ஆயுள் பொருத்தம் பார்ப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பழைய மிக எளிய முறை. உதாரணமாக ஆணுக்கு இராகுதெசை முடியுங்காலத்தில் பெண்ணுக்கும் இராகுதெசை முடிதலாகாது. இவ்வடிப்படையிலேயே இரச்சுப் பொருத்தம் தோன்றியிருக்கவேண்டும்.

| இரச்சு | நட்சத்திரங்கள் | நட்சத்திர அதிபதி |
|---|---|---|
| சிரோரச்சு | மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் | செவ்வாய் |
| ஆரோக கண்டரச்சு | ரோகிணி, அத்தம், திருவோணம் | சந்திரன் |
| அவரோக ,, | திருவாதிரை, சுவாதி, சதயம் | ராகு |

| | | |
|---|---|---|
| ஆரோக உதரரச்சு | கார்த்திகை, உத்தரம், உத்தராடம் | சூரியன் |
| அவரோக ,, | புனர்பூசம், விசாகம், பூரட்டாதி | வியாழன் |
| ஆரோக தொடைரச்சு | பரணி, பூரம், பூராடம் | வெள்ளி |
| அவரோக ,, | பூசம், அனுஷம், உத்தரட்டாதி | சனி |
| ஆரோக பாதரச்சு | அசுவினி, மகம், மூலம் | கேது |
| அவரோக ,, | ஆயிலியம், கேட்டை, ரேவதி | புதன் |

இருபத்தேழு நட்சத்திரங்களும் ஒன்பது பிரிவுகளாக ஒன்பது இரச்சுக்களாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் அடங்கும் மூன்று நட்சத்திரங்களும் 1,10,19-ம் நட்சத்திரங்களாக வருவதுடன் நட்சத்திர அதிபதிகளாக 1,10,19-ம் நட்சத்திரங்களுக்கு ஒரே கிரகம் அமைவது காணக்கூடியதொரு அம்சம். உதாரணமாக சிரோரச்சுவில் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய 1,10, 19-ம் நட்சத்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இம் மூன்று நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரத்தில் பிறந்தாலும் செவ்வாய் மகாதெசையே முதலாவதாக வரும். இந்நட்சத்திரத்தினர் ஒருவரை ஒருவர் மணம்புரியினும் வயது, பிறக்கும்பொழுது சந்திரன் நின்றநிலை இவைகளைப் பொறுத்து தெசைகள் ஏககாலத்தில் முடிவடையமாட்டா. அப்படி முடிவடையினும் அவை ஆயுள் நிர்ணயத்திற்கு வழிகோலாக அமையமாட்டா. ஆயுள் நிர்ணயம் செய்வதற்கு பல முறைகள் உண்டு. உதய இலக்கினத்தைப் பொறுத்து மாரகாதிபதி, பாதகாதிபதி வேறுபடும். அவற்றுள்ளும் முதலாம்தர மாரகர், இரண்டாந்தர மாரகர், மூன்றுந்தர மாரகர் என வகுப்புகள் உண்டு. நிபுணர்கள் செய்த ஆராய்ச்சியின் விளைவாக அஷ்டாம்சச் சக்கரம் (இராசியில் எட்டில் ஒரு பாகம்) தனித்தனி கணித்துப் பார்த்தல் ஆயுள் நிர்ணயத்தை தெளிவாக்குகின்றது. மேலும், தம்பதிகளுக்கு ஏககாலத்தில் ஒரே தெசைகள் தொடங்குமாயினும் முடிவடையுமாயினும் இருவர் வாழ்விலும் சுகம் வரும்வேளை ஒன்றாகவும் துக்கம் வரும்வேளை ஒன்றாகவும் வரும் என்பது நடைமுறைக்கு ஒவ்வாத தொன்று.

கல்யாணப் பொருத்தங்கள் பார்க்கும் பொழுது சாதகங்களை தனித்தனி பார்த்தல் வேண்டும். இரச்சுப் பொருத்தம் இல்லாதவர்கள் திருமணத்தில் தாலிஅணிவது எவ்விதமான பாதிப்பையும் சாஸ்திர ரீதியில் ஏற்படுத்தாது என்பது அனுபவத்தில் ஆராய்ச்சியில் கண்டதொருண்மை ஆகும். கல்யாணப் பொருத்தங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து அடிப்படையான சோதிட விளக்கங்கள் கண்ட அனுபவச் சான்றுகளை முன் வைத்த பெரியவர் ஒருவர் தன்னைப்பற்றி கூறியவிடத்து தானும் மனைவியும் கண்டரச்சு என்றார். எண்பது வயதுக்கு மேலாகியும் முறைப்படி தாலி கட்டி திருமண வாழ்வைத் தொடங்கிய இத்தம்பதிகள், இன்றுவரை கிரவுஞ்சப் பட்சிகள்போல் இணைபிரியாமல் ஆல்போல் விழுதுவிட்டு விசாலித்து வளர்ந்து வாழ்கின்றமை இங்கு நினைவூட்டத்தக்கது.

உளவியல் ரீதியாக பார்ப்போமானால், மங்கல அணி அணியும் மரபில் உதித்த மங்கை நல்லாள் ஒருத்திக்கு திருமாங்கல்யம் அணியும் நாளே நன்னாள். வாழ்ந்தநாள் முழுதுங் கூம்பியிருந்தமுகம் மணமுகூர்த்தத்தில் மாங்கல்யம் அவள் மிடற்றை வளைக்கும் காலன்றோ மலர்கின்றது! "மங்கல அணியிற் பிறிதணி மகிழான்" என்று சிலப்பதிகாரம் சொல்வதனாலும், "மணவணி முற்றுறும் மாதுபோந்து தன் கணவனது ஒருபுடை கலந்த காலையில்" என்று கந்தபுராணஞ் சொல்வதனாலும் மாங்கல்யம் அணியும் மகிழ்ச்சியை இரச்சுப் பொருத்தம் காரணமாக ஒருத்தி இழந்தாளாயின் அன்றுமட்டுமல்ல மக்களைப் பெற்றின்புற்றாலும் கூட அவள் வாழ்வில் உளவியல் ரீதியான பல தாக்கங்கள் விளைவுகள் அங்கு ஏற்பட இடமுண்டு. (முற்றும்.)

---

சந்தேக...... (17-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். ஏச். எம். றசீன், கல்முனை.

சந்: கிரககாலம் பற்றி வாராதிபன் முதலாக சூரியன், செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், சனி, சந்திரன், ராகு என்ற ஒழுங்கில் $3\frac{3}{4}$ நாழிகை அவ்வக்கிரகங்களின் காலம் என ஒரு நூலிலுள்ளது. இதுபற்றிக் ஹோரைக்குத் தொடர்புண்டா? விளக்கம் தரவும்.

நிவி: நீங்கள் குறிப்பிட்ட கிரகங்களின் ஒழுங்குமுறை தவறாக உள்ளது. ஹோரை என்பது $2\frac{1}{2}$ நாழிகைக்கு (1 மணி) ஒரு கிரகத்தின் காலமாக மாறி மாறி அமையும். நீங்கள் கூறும் ஒழுங்குக்கும் ஹோரைக்கும் தொடர்பில்லை.

# இந்து சமய விரதங்களும் வியாபகங்களும்

"வேதாகம சோதிட பூஷணம்"

தொடர் 5 மாசி இதழ் தொடர்ச்சி

## நவராத்திரி விரத ஆரம்பம்

நவராத்திரி விரதம் ஆஸ்வீஜ சுத்தப் பிரதமையில் ஆரம்பிக்கப்படுகின்றது. சுத்தப் பிரதமை என்று கூறுவது அமாவாசை வேதையில்லாத பிரதமையென்று பொருள்படும். எனவே சூரியோதய காலத்தில் அமாவாசை பிரதமையுடன் சேரக் கூடாது என்பதாகும். ஆயினும் பிரதமை அன்றே முடியுமானால் அன்று கொள்வதில் பாதகமில்லை;

அமாயுக்தா நகர்த்தவ்யா ப்ரதிபத் பூஜனே மம
முகூர்த்த மாத்திரா சுர்த்தவ்யா த்விதீயாதி குணன்
[விதா. —தேவீ புராணம்

[இதன் பொருள்: அமாவாசையுடன் சேர்ந்த பிரதமைத் திதியன்று எனக்கு நவராத்திரி பூஜை ஆரம்பிக்கக் கூடாது. ஆனால் பிரதமையானது துவிதியைத் திதியுடன் சிறிது நேரமாவது கூடியிருந்தால் அத்தினத்தில் பூஜை ஆரம்பிப்பது சிறந்தது என்பதாகும்.]

யதிகுர்யாக் அமாயுக்தாம் ப்ரதிபத் ஸ்தாபனே மம
தஸ்ய சாபாயுதம் தத்வா பஸ்மசேஷம் கரோம்யஹம்
— தேவீ புராணம்

[இ—ள்: அமாவாசை சேர்ந்த பிரதமையில் எவன் எனக்கு நவராத்திரி பூஜை ஆரம்பிக்கிருனே அவனுக்குச் சாபம் கொடுத்துச் சாம்பலாகச் செய்வேன் என்பதாகும்.]

எனவே அமாவாசை சேராத சுத்தப்பிரதமையில் நவராத்திரி ஆரம்பம் கொள்ளப்படவேண்டுமென்பது சாஸ்திர சம்மதமாகும்.

நாள்கணக்கைப் பார்க்கும்போது பொதுவாக சில சந்தர்ப்பங்களில் திதி வியாபகத்தைப் பொறுத்து ஒருநாள் கூடியோ அல்லது குறைந்தோ வரும். பிரதமை முதல் நவமி வரையுள்ள நாட்கள் எத்தனை வருகின்றது என்பதைக் கவனிக்க வேண்டுமே தவிர ஒன்பது நாட்கள் தான் வர வேண்டுமென்று நியதியில்லை.

## மஹா நவமி

இது நவமி அபரான்ன வியாபகமாக இருக்கும்போது கொள்ளப்படவேண்டும். இத்தினத்தில் சரஸ்வதிக்கு விசேட பூஜையும், ஆயுத பூஜையும் நடைபெறுவது வழக்கம்.

## விஜய தசமி

தசமித்திதி அபரான்ன வியாபகமாக இருக்கும்போது கொள்ளப்படவேண்டும்.

இந்த நவராத்திரித் தினங்களில் முதல்மூன்று நாட்களும் வீரத்தை வேண்டி துர்க்காதேவியையும், நடுமூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலக்குமிதேவியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியைக் குறித்து சரஸ்வதிதேவியையும் வழிபடுவது வழக்கமாகும்.

நிகழும் பிரமோத வருடத்தில் புரட்டாதி 3உ (19-09-90) புதன்கிழமை காலை 6-17 வரையும் அமாவாசை வியாபகமாக இருப்பதால் மறுநாளாகிய வியாழக்கிழமை 20-9-90 அன்று நவராத்திரி ஆரம்பம் கொள்ளப்படுகிறது.

## கேதாரகௌரி விரதம்

இது ஆஸ்வீஜ சுக்லபக்ஷ தசமியில் ஆரம்பித்து அடுத்துவரும் அமாவாசை வரை இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிக்கவேண்டிய விரதமாகும். இவ்விரதாரம்ப தினத்தன்று விஜயதசமி வருவதால் நவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கின்றவர்கள், நவராத்திரி விரதத்தைப் பூர்த்தி செய்து பாரணையின்போது அன்னம் உட்கொள்ளாமல் துளசியும் நீரும் உட்கொண்டு, பாரணையை நிறைவேற்றி பின் கேதாரகௌரி விரதத்துக்குச் சங்கல்பம் செய்துகொள்ளுதல் வேண்டும். 21 நாட்களும் விரதமனுஷ்டித்து மறுநாள் பாரணை செய்துகொள்ளலாம்.

### ஸ்திரீகளுடன் வாழ

புதன் பலவானுகி லக்கினத்திற்கு 10 லும், 7-ம் அதிபனுக்கு 3ல் சந்திரனிருந்தாலும்; 2, 12-ம் அதிபர்கள் 3லிருக்க குரு பார்வையுமிருந்தாலும்; 9-ம் அதிபன் பார்த்தாலும்; 7-ம் அதிபன் 10-ம் அதிபனுடன் கூடியிருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் திருஷ்டித்தாலும்; 9-ம் அதிபன் 7லும், 7-ம் அதிபன் 4லும் இருந்தாலும்; 7, 11 க்குரியவர்கள் கேந்திரங்களிலிருந்தாலும் ஸ்திரீகளுடன் வாழ்வர்.

# வெளிநாட்டு வாய்ப்புண்டா?

ஐ. வைத்தியநாதர் B.Sc. முள்ளானை, இளவாலை.

## ஜாதக பாடம்

### கிரகநிலைகள்

உங்கள் இராசி மண்டலத்தை எடுத்து (ல) முதலாவதாக வைத்துக்கொண்டு வலஞ்சுழியாக அதாவது ஒரு மணிக்கூட்டின் கம்பிகள் ஓடும் திசையாக ஒவ்வொரு வீட்டையும் எண்ணிக் கொண்டு வரும்பொழுது 1-ம் வீடு (ல) 4-ம் வீடு, 7-ம் வீடு, 10-ம் வீடு ஆகியவற்றைக் கேந்திர ஸ்தானங்கள் எனப்படும்: இவ்வீடுகளில் உள்ள கிரகங்கள் இலக்கினத்திற்குக் கேந்திரத்தில் உள்ள தாகச் சொல்லப்படும்; இவ்வீட்டுக்குரிய அல்லது அதிபதிக் கிரகங்களை கேந்திராதிபதி எனப்படும்.

இவ்வாறே இலக்கினம் 1-ம் வீடு, 5-ம் வீடு, 9-ம் வீடு ஆகியவற்றை இலக்கினத்தில் இருந்து வலம் சுழியாக எண்ணும்பொழுது இவ்வீடுகள் பெறப்படும். இவ்வீடுகளை திரிகோணஸ்தானங் கள் அல்லது திரிகோண வீடுகள் என்பர். இவ் வீட்டு அதிபதிகள் திரிகோணாதிபதிகள் எனப் படுவர்.

### வீட்டு அதிபதிகள்

மேலே கேந்திராதிபதி(கேந்திரம் + அதிபதி), திரிகோணாதிபதி(திரிகோணம் + அதிபதி) என்னும் பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அவற் றையும் ஈண்டு விளக்குதல் அவசியமாகும். ஒவ் வொரு வீட்டுக்கும் 9 கிரகங்களில், ராகுவையும், கேதுவையும் தவிர்ந்த மற்றையவர்கள் அதிபதி யாகிறார்கள். அவை பின்வருமாறு:

| இராசி | அதிபதி |
|---|---|
| மேடம், விருச்சிகம் | செவ்வாய் |
| இடபம், துலாம் | சுக்கிரன் |
| மிதுனம், கன்னி | புதன் |
| தனுசு, மீனம் | வியாழன் |
| மகரம், கும்பம் | சனி |
| கற்கடகம் | சந்திரன் |
| சிங்கம் | சூரியன் |

உமது இலக்கினம் மிதுனமாயின்:

| | | | |
|---|---|---|---|
| புதன் | 1வது | கேந்திராதிபதி | (மிதுனம்) |
| புதன் | 4வது | கேந்திராதிபதி | (கன்னி) |
| வியாழன் | 7வது | கேந்திராதிபதி | (தனுசு) |
| வியாழன் | 10வது | கேந்திராதிபதி | (மீனம்) |

இவ்வாறே,

| | | |
|---|---|---|
| புதன் | 1வது | திரிகோணாதிபதி |
| சுக்கிரன் | 5வது | திரிகோணாதிபதி (துலாம் மிது னத்திற்கு 5-ம் வீடு) |
| சனி | 9வது | திரிகோணாதிபதி (கும்பம் மிது னத்திற்கு 9வது வீடு) |

துலா இராசி அதிபதி சுக்கிரன்
கும்ப இராசி அதிபதி சனி.

கீழேயுள்ள சக்கரத்தைக்கொண்டு எந்த ஒரு வீட்டிற்கும் கேந்திராதிபதிகளையும், திரிகோணாதி பதிகளையும் இலகுவாக அறியலாம். மேலும் ஒவ் வொருவீட்டு அதிபதியும் ஆட்சியாகவும் உள்ள னர்; ஒவ்வொரு வீட்டில் காணப்படும் கிரகங் கள் அந்தவீட்டு அதிபதிகளுமாவர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழன் மீனம் | செவ்வாய் மேடம் | சுக்கிரன் இடபம் | புதன் மிதுனம் |
| சனி கும்பம் | 12 இராசிகளின் இராசியதிபதிகள் | | சந்திரன் கற்கடக |
| சனி மகரம் | | | சூரியன் சிங்கம் |
| வியாழன் தனுசு | செவ்வாய் விருச்சிக | சுக்கிரன் துலாம் | புதன் கன்னி |

இராசிகளின் பெயர்களும் அதிபதிகளும் உமது லக்கினம் துலாமாயின்:

| வீடு | பெயர் | கிரகம் |
|---|---|---|
| 1 | லக்கினாதிபதி | சுக்கிரன் |
| 2 | இரண்டாதிபதி | செவ்வாய் |
| 3 | மூன்றாதிபதி | வியாழன் |
| 4 | நாலாதிபதி | சனி |
| 5 | ஐந்தாதிபதி | சனி |
| 6 | ஆறாதிபதி | வியாழன் |
| 7 | ஏழாதிபதி | செவ்வாய் |
| 8 | அட்டமாதிபதி | சுக்கிரன் |
| 9 | ஒன்பதாதிபதி | புதன் |
| 10 | பத்தாதிபதி | சந்திரன் |
| 11 | பதினோராதிபதி | சூரியன் |
| 12 | பன்னிரண்டாதிபதி | புதன் |

இராசிச் சக்கரத்தில் ராகு, கேதுக்களுக்கு நிலை யான ஆட்சிவீடுகள் இல்லை.

### கிரகங்களும் பார்வைகளும்

சகல கிரகங்களும் 7-ம் வீட்டைப் பார்க்கின்றன. இவற்றைவிட செவ்வாய் 4,8 வீடுகளையும், சனி 3,10-ம் வீடுகளையும், வியாழன் 5,9-ம் வீடுகளையும், ராகு, கேது 3,11-ம் வீடுகளையும் பார்க்கின்றனர்.

### சுபக்கிரகங்களும், பாபக்கிரகங்களும்

சூரியன், சனி, செவ்வாய், இராகு, கேது பாபிகள். புதன் (½சுபர் ½பாபி), குரு, சுக்கிரன், வளர்சந்திரன் சுபர்கள், பாபிகளோடு புதன் சேர்ந்தால் பாபி ஆகிறார். சுபர்களோடு சேர்ந்தால் சுபராகிறார். சுக்கிலபட்சத்து அட்டமிமுதல் கிருஷ்ண பட்சத்து அட்டமி வரை சந்திரனைச் சுபராகக் கொள்ளலாம்.

### 12 இராசிகளில் கிரகங்களின் நிலைகள்

### கிரகங்களின் சத்துரு மித்துருக்கள்

| கிரகம் | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|
| சூரியன் | சந்.செ,குரு | புதன் | சு,சனி,ரா,கே |
| சந்திரன் | சூரி,புதன் | செ,கு,சு,சனி | ரா,கே |
| செவ்வாய் | சூ.சந்,குரு | சுக்,சனி | புத,ரா,கே |
| புதன் | சூரி,சுக் | செ,கு,சனி,ரா,கே | சந்திரன் |
| குரு | சூ,சந்,செ | சனி,ரா,கே | புத,சுக் |
| சுக்கிரன் | பு,சனி.ரா,கே | செ,குரு | சூரி,சந் |
| சனி | பு,சுக்,ரா,கே | குரு | சூ,சந்,செ |
| இராகு | சனி,சுக் | புத,குரு | சூ,சந்,செ |
| கேது | சனி சுக் | புத,குரு | சூ,சந்,செ |

| | | | |
|---|---|---|---|
| மீனம் உபயராசி சலராசி | மேடம் சரராசி | இடபம் ஸ்திரராசி ¼ சலராசி | மிதுனம் உபயராசி |
| கும்பம் ஸ்திரராசி ¾ சலராசி | சர ராசிகளும் சல ராசிகளும் | | கடகம் சரராசி சலராசி |
| மகரம் சரராசி ¾ சலராசி | | | சிங்கம் ஸ்திரராசி |
| தனுசு உபயராசி | விருச்சிக ஸ்திரராசி ¼ சலராசி | துலாம் சரராசி ½ சலராசி | கன்னி உபயராசி |

(தொடரும்)

**முக்கிய குறிப்பு:-**

'சோதிட மலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ-ர்

*****************************************

# ஆய்வு மன்றம்

*****************************************

வி. சுவர்ணலதா, இலகடி, மாவிட்டபுரம்.

உங்கள் ஜாதகப்படி ராகுதசையில் புதன் புத்தி 1990-12-26 வரை நடக்கும். புதன் 11-ம் வீட்டில் இருப்பதாலும், 1990 ஆடி முதல் குரு 11-ம் வீட்டுக்கு மாற்றமடைவதாலும் கல்வியில் முன்னேற்றமான பலன்களைக் கொடுக்கும். ராகு தசை நடப்பதால் அம்பாள் வழிபாடு செய்து வரவும்.

த. சினிவாசகம், தாமரைக்கேணி, மட்டுநகர்.

தங்கள் ஜாதகப்படி தற்போது நடக்கும் செவ்வாய்தசை தொழில் முன்னேற்றத்தைத் தரும். 20-7-1990-ல் நிகழும் வியாழமாற்றமும் உகந்த பலன்களைக் கொடுக்கக் கூடியதாக அமைகின்றது.

வே. சிவானந்தன், வியாபாரிமூலை.

தங்கள் ஜாதகப்படி தற்போது சுக்கிரதசையில் சனிபுத்தி நடக்கின்றது. சனி 10-ல் ஆட்சி பெற்றிருக்க, சுக்கிரன் லாபத்தானத்தில் இருப்பதால் நற்பலன்கள் நிகழவேண்டும். மேலும், மார்ச் 20 வரை தங்கட்கு ஏழரைச்சனி நடைபெற்றது. 20-7-1990 வரை அட்டமத்து வியாழன் நிகழும். அதன்பின் நிலைமை சீர்திருந்த இடமுண்டு.

தே. மலர்விழி, திருகோணமலை.

உங்களுக்கு சந்திரதசையில் ராகுபுத்தி நடக்கின்றது. 1991-10-23-ல் சந்திரதசையில் குருபுத்தி ஆரம்பமாகும். அதில் தொழில் உயர்ச்சியும், முன்னேற்றமும் கிட்டும்.

கு. குருசாமி, சிவன்கோவில், கதிர்காமம்.

தங்கள் ஜாதகப்படி தற்போது நடக்கும் சூரியதசை பலவகையிலும் முன்னேற்றம் தரக் கூடியது. சூரியன் குருவின் திருஷ்டியைப்பெற்று லாபஸ்தானத்தில் இருப்பது சிறந்ததே! எனினும் ராகு 6-ம் வீட்டில் இருப்பதால் நோய் அடிக்கடி ஏற்படலாம். இதற்கு அம்பாள் வழிபாடு மேற்கொண்டு வரவும்.

தே. மலர்விழி, திருகோணமலை.

உங்கள் ஜாதகப்படி 7-ம் அதிபனை குரு திருஷ்டிப்பதால் நற்குணமும், மனத்திடமும்,

தொழில்நுட்பத்துறையில் தொழில் புரிபவருமான மணமகன் கிடைக்க இடமுண்டு.

திருமதி சி. பொன்னம்மா, யாழ்ப்பாணம்.

நீங்கள் குறிப்பிட்ட ஜாதகருக்கு 1991-25-8ன் மேல் ஆரம்பிக்கவிருக்கும் சனிதசை சுக்கிரபுத்தியில் திருமணம் கைகூட இடமுண்டு. 2,7,11-ம் வீடுகளை சனி திருஷ்டிப்பதால் திருமணத்தில் இழுபறியும். சொந்தமற்ற இடத்தில் திருமணமும் ஏற்படலாகும்.

ரீ. வனிதா, பிரதானவீதி, பருத்தித்துறை.

தங்கட்கு 1991-3-5 இன் மேல் ஆரம்பிக்கவிருக்கும் குருதசையில் அந்நிய நாட்டுப் பிரயாணம் கைகூட இடமுண்டு.

து மகாதேவன், தாயன்மார்கட்டு.

தங்களுக்கு தற்போது சூரியதசையில் புதன் புத்தி நடக்கின்றது. சூரியன் 6-ம் வீட்டதிபதி இருப்பதால் நோய் காட்டும். அத்துடன் 5-ல் செவ்வாய் இருப்பதால் இருதய நோய் ஏற்பட இடமுண்டு. 1992 இல் சூரியதசை முடிவடைந்து சந்திரதசை ஆரம்பிக்கும். சந்திரதசை முன்னேற்றமான பலன்களைத் தரும்.

வா. நவரத்தினராசா, காரைநகர்.

தங்கள் ஜாதகப்படி லாபஸ்தானத்தில் சுக்கிரன் இருக்கின்றார். ஆனால் சுக்கிரன தைந்நிய யோகம் பெறுவதால் நற்பலனைக் கொடுக்கக்கூடியதாக இல்லை. 10ல் சனி இருப்பதால் இரும்பு, தொழில்நுட்பத்துறையுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் தொழில்கிட்ட இடமுண்டு.

எஸ் சரஸ்வதி, யாழ்ப்பாணம்

நீங்கள் அனுப்பியுள்ள ஜாதகரின் கிரகப்படி சந்திரதசையில் குருபுத்தி நடக்கின்றது. சந்திரன் குடும்பத்தானதிபனுகி 11-ல் இருப்பதும், குரு 7-ல் ஆட்சி பெறுவதும் திருமணம் நடைபெறச் சாதகமான காலமாகும். 2, 7-ம் வீடுகள் சந்திரன், குருவின் வீடுகளாக அமைவதால் ஓரளவு சொந்தத்தில் களத்திரம் கிட்டலாம்.

ஆ. மகேஸ்வரி, யாழ்ப்பாணம்.

நீங்கள் குறிப்பிட்ட ஜாதகருக்கு தற்போது நடக்கும் சந்திரதசை புதன் புத்தியில் திருமணம் நடக்க இடமுண்டு. நவாம்ச லக்னதிபதி புதனாக அமைவது இதற்கு ஏதுவானது. விவாகத்தின் பின்பே வீட்டுப் பலன் கிடைக்கும். சொந்தத்திற்குள் திருமணம் நடைபெறலாம்.

---

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு, பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில் சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் பூரணமாக நிரப்பப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படா. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ........................................................................

விலாசம்: ........................................................................


பிறந்த திகதி: ஆங்கிலம் ..........................................................

தமிழ் ..........................................................

,, நேரம்: ..........................................................

,, இடம்: ..........................................................

நட்சத்திரம்: .................................................. ம்-பாதம்




ஜனனகாலம்.............................தசைஇருப்பு

................................................

வரு.........மா.........நாள்.........

# சோதிட அறிவுப் போட்டி இல.2

போட்டி விபரங்கள்:–

* இங்கு மாதந்தோறும் மூன்று சோதிட வினாக்கள் தரப்படும். அவற்றிற்கான சரியான பதில்களனுப்பித் தெரியப்படும் ஒரு அதிஷ்டசாலிக்கு ஒருவருடகாலத்திற்கு 'சோதிட மலர்' (12 இதழ்கள்) இனாம்.

* வினாக்களுக்கான பதில்களை கீழே தரப்படும் படிவத்தில் எழுதி; அதனை வெட்டி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி பின்வரும் முகவரிக்கு அனுப்புக.

முகவரி:- "சோதிட அறிவுப் போட்டி",
சோதிட மலர், திருக்கணித நிலையம்,
மட்டுவில் – சாவகச்சேரி.

* போட்டி முடிவு திகதி:- 01–06–90

இங்கு பயன்படும் கணிப்புகளுக்கு திருக்கணித பஞ்சாங்கமே பாவிக்கப்பட்டுள்ளது.

**வினா:- 24-3-90 சனிக்கிழமை காலை 7-00 மணிக்கு யாழ் நகரில் பிறந்த குழந்தையின் ஜாதகம் தரப்பட்டுள்ளது. இதில் மூன்று தவறுகள் உள்ளன. அவற்றை கண்டுபிடித்து எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| லக்,சூரி, புத | 2 | 3 | குரு |
| சந் | சதயம் 1-ம் பாதம் | | 5 |
| செவ்,சுக் ராகு | | | கேது |
| யுரே நெப் சனி | 9 | 8 | 7 |

சோதிட அறிவுப்போட்டி இல. 2ன் விடைகள்:

1 ..................................................

2. ..................................................

3. ..................................................

பெயர் ..................................................

முகவரி ..................................................

..................................................

**சோதிட அறிவுப்போட்டி இல.1-ன் விடைகள்**

(1) சுக்கிரன் கடகத்தில் இருக்க வேண்டும்.
(2) சனி தனுவில் வரவேண்டும்.
(3) மகரம் 7-ம் வீடாக அமையவேண்டும்.

பல அன்பர்கள் சரியான விடை எழுதியுள்ளார்கள்: அதில் பரிசுபெறும் அதிஷ்டசாலி திரு. மு. கனகசபேசன், நீர்வேலி தெற்கு, நீர்வேலி. அன்னாருக்கு ஒருவருட சோதிடமலர் இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

# சோமரும் சோதிடரும்

**சோமர்:** ஐயா! ஐயா!

**சோதிடர்:** ஓ சேரமரே வாரும் வாரும் என்ன கையிலை ஜாதகத்தோடையே வந்திருக்கிறீர்.

**சோமர்:** அதில்லை, சுவிஸிலை இருக்கிற என்ரை மகனுக்கு கல்யாணம் பார் பாரென்று பார்த்துக் களைச்சுப் போனன். அவனுக்குத் தலை நரைக்கிற வயசும் வந்திட்டுது; என்ன செய்யிறதெண்டு தெரியேலை. அதுதான் அவன்ரை ஜாதகத்தை ஒருக்கா உங்களிட்டை காட்டுவமெண்டு...

**சோதிடர்:** அப்ப தாரும் பாப்பம்.

**சோமர்:** ஓம் ஐயா! இந்தாங்கோ திருக்கணிதப்படி எழுதின ஜாதகம்தான்.

**சோதிடர்:** அப்ப இப்பிடியே உடனேயே பார்த்திடலாம். திருப்பிக் கணிக்கிற வேலையில்லை.

**சோமர்:** மகனுக்கு மேடத்திலை செவ்வாய் இருக்கு, துலா லக்கின சாதகம் எல்லாரும் 7இலை செவ்வாய் தோஷமெண்டு தட்டிக்கழிக்கினம்.

**சோதிடர்:** கொஞ்சம் பொறுமன். நான் சொல்லுறதைக் கேளுமன்: செவ்வாய் 7 ஆம் இடத்திலை இருந்தாப்போலை செவ்வாய் தோஷமெண்டு சொல்லமுடியுமே. திருக்கணித பஞ்சாங்கம் 24-ம் பக்கத்திலை செவ்வாய் தோஷத்தைப் பற்றி எழுதியிருக்கெல்லே.

**சோமர்:** ஓ. நான் பாத்தனான்தான். எண்டாலும் சில சோதிடர்மார் என்னைக் குழப்பிப் போட்டினம். அதாலை எனக்கு ஐமிச்சமாயிருக்கு.

**சோதிடர்:** ஏன் ஐமிச்சப் படுவான்? நியாயம் சரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ளத்தானே வேணும். இஞ்சை பாரும்: உம்மடை மகன்ரை ஜாதகத்திலை மேடத்திலை 7-ம் வீட்டிலை செவ்வாயிருந்தாலும் அச்செவ்வாய் தனது சொந்த வீட்டிலைதானே இருக்கிறார். அதோட தனுசுவிலையிருந்து வியாழன் பார்க்கிறதாலையும் அந்தச் செவ்வாயாலை தோஷமில்லையே.

**சோமர்:** அப்ப செவ்வாய் தோஷமில்லாத ஜாதகத்தைப் பாக்கலாமெண்டிறியள்.

**சோதிடர்:** நல்லாப் பாக்கலாம். இப்படித்தானே யாழ்ப்பாணத்திலை எத்தினையோ பேர்ரை வாழ்க்கையை இல்லாத பொல்லாததுகளைச் சொல்லி நாசம் பண்ணுறுங்கள்.

**சோமர்:** நல்லாச் சொன்னீங்களய்யா. அதுதான் சரி. நான் வெள்ளணவே மகன்ரை ஜாதகத்தை உங்களுட்டையொருக்கா காட்டியிருந்தால் இவ்வளவுக்கு அலைஞ்சிருக்கத் தேவையில்லை. சரி நான் வாறனையா.

– உதிஷ்டிரன்

பிரமோத புத்தாண்டே, அள்ளித் தா அமைதியினை.

உண்மை ஒளி வளர்க,
தருமம் தழைத்தோங்குக,
நாட்டு வளம் பெருகுக.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று
வேண்டுமல்லவா?

நற்பணிகள் தொடரவென நல்குங்கள் ஆதரவு

மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## எம் இனிய அன்பு நெஞ்சங்களே!

உங்கள் கரங்களில் தவழ்ந்துவரும் இச் சோதிடமலர் என்றென்றும் வாடாமல் இனிய நறுமணம் வீசி சோதிட உலகின் திசைகாட்டியாகவும், நிர்க்கதியானோரின் நிதர்சனமாகவும், ஆதரவாளரின் உறுதுணையாகவும் தொடர்ந்தும் இருந்து வரச் செய்வது வாசகப் பெருமக்களாகிய உங்கள் கடமையல்லவா? இம்மலர் உங்கள் இல்லந்தேடிவர இன்றே சந்தாதாரராகுங்கள். இதுகாறும் சந்தாவைப் புதுப்பியாதவரும் சந்தாப்பணத்தைச் செலுத்திப் புதுப்பித்து நாளொரு பொழுதும் பெருகிவரும் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் இம்மலர் வெளிவர ஊக்கமளிக்க வேண்டுகின்றோம்.

### சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| இலங்கைக்கு மாத்திரம் | வருடசந்தா | ரூபா | 70-00 |
| மலேசியா (விமானவழி) | வருடசந்தா | ,, | 230-00 |
| இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் | வருடசந்தா | ரூபா | 270-00 |

தனிப் பிரதி வேண்டுவோர்: ரூபா 5-75ற்கு காசோலையோ, தபாற்கட்டளையோ அல்லது முத்திரையோ அனுப்பிப்பெற்றுக்கொள்க.

கடிதம் முதலியன அனுப்பப்பட வேண்டிய முகவரி:
முகாமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Published by S. Jegatheeswara Sarma Printe at Thirukkanitha printing works Madduvil, Chavakachcheri; Sri Lanka.